Vol: 41 Issue : 45 2026 Jan 10- 16
ஆண்டு: 41 இதழ்: 45 2026 ஜன 10-16

ரூ.20

வெற்றிகரமான வாழ்க்கைக்கு வழிகாட்டி!

# பாலஜோதிடம்

எண்கள்

BALAJOTHIDAM ENNGAL

ஆசிரியர் : முருகு பாலமுருகன்



பொங்கல் வைக்க உகந்த நேரம்!

## ஒரே வயதில் திருமணம் செய்யலாமா?

# வாங்கி விட்டீர்களா?




Advt

# பொங்கல் வைக்க உகந்த நேரம்!

நிகழும் மங்களகரமான விசுவாவசு வருஷம், மார்கழி மாதம், 30-ஆம் தேதி, 14-1-2026 புதன்கிழமை தேய்பிறை ஏகாதசி திதி, அனுஷ நட்சத்திரம்கூடிய சுப தினத்தில் பகல் 3.07 மணிக்கு ரிஷப லக்னத்தில் சூரியன் மகர ராசிக்கு பிரவேசிக்கிறார். இதனை முன்னிட்டு விசுவாவசு வருஷம் தை மாதம் 1-ஆம் தேதி 15-1-2026 வியாழக்கிழமை துவாதசி திதி, கேட்டை நட்சத்திரம் கூடிய சுப தினத்தில் காலை 9.00 மணிக்கு மேல் 11.00 மணிக்குள் சுக்கிரன், புதன் ஓரையில் அல்லது பகல் 1.00 மணிக்குமேல் 1.30 மணிக்குள் குரு ஓரையில் அல்லது பிற்பகல் 4.00 மணிக்குமேல் 6.00 மணிக்குள் சுக்கிரன், புதன் ஓரையில் பொங்கல் வைப்பது உத்தமம்.

புது பானையில் மஞ்சள், குங்குமம் வைத்து மஞ்சள் கொடி கொத்தை எடுத்து கங்கணமாக தயாரித்து பானையை சுற்றிக் கட்டி அவரவர் சம்பிரதாய முறைப்படி பொங்கல் வைக்கலாம். குலதெய்வத்தை வணங்கி பொங்கல் வைத்து பொங்கி வரும் போது பொங்கலோ பொங்கல் என்று மூன்று முறை கூவி சூரியனை வணங்குவது நல்லது.

கரும்பு, மஞ்சள் செடி கொத்து, சிவப்பு பூசணி, கிழங்கு வகை, மொச்சை, அவரை, பழ வகைகள் வைத்து நிவேதனம் செய்து, புஷ்பத்தை எடுத்துத் தூவி வணங்கி பூஜை முடிந்ததும் கோமாதாவான பசுவுக்கு பொங்கலை வாழை இலையில் வைத்து உண்ண வைப்பது, பிறகு நம்முடைய மூதாதையர்களை நினைத்து காகத்துக்கு பொங்கல் வைப்பது உத்தமம்.

## மாட்டுப் பொங்கல்


மறுநாள் 16-1-2026 வெள்ளிக்கிழமையன்று காலை 6.00 மணிக்குமேல் 8.00 மணிக்குள் சுக்கிரன், புதன் ஓரையில் பகல் 1.00 மணிக்குமேல் 3.00 மணிக்குள் சுக்கிரன், புதன் ஓரையில் அல்லது பகல் 5.00 மணிக்கு மேல் 6.00 மணிக்குள் குரு ஓரையில் கோபூஜை செய்து, வாழை இலையில் பொங்கல் வைத்து அவற்றிற்கு உண்ண கொடுப்பது நல்லது.

## காணும் பொங்கல்

மறுநாள் காணும் பொங்கலாகும். இன்றையநாள் முழுவதும் உற்றார் மற்றும் நண்பர்களுடன் சேர்ந்து உறவாடி உற்சாகமாக பொழுதுகளை கழிக்கலாம். மற்றவர்களுக்கு பொங்கல் இனாம் கொடுப்பது, பரிசுப் பொருட்கள் கொடுப்பதுமூலம் நாமும் மகிழ்ந்து மற்றவர்களையும் மகிழ்விக்கலாம். ●



மகேஷ் வர்மா



# யோகங்களால் ஒரு மனிதனுக்கு என்ன நடக்கும்?

**ராஜமந்திரி யோகம்**

ஒரு ஜாதகத்தில் குரு பகவான் கேந்திர ஸ்தானத்தில் இருந்தால், அதற்கு எந்த பாவ கிரகங்களின் பார்வையும் இல்லாமலி ருந்தால், எந்த பாவ கிரகங்களும் குருவுடன் இல்லாமலிருந்தால், அதுதான் ராஜ மந்திரி யோகம். இதில் பிறப்பவர்கள் பல விஷயங்களையும் அறிந்தவர்களாக இருப்பார்கள். அறிவாளியாக இருப்பார்கள். நீதி நூல்களைப் படித்தவர் களாக இருப்பார்கள். ராஜாவுக்கு மந்திரி இருக்கும் நிலையில் இருப்பார்கள்.

**விச்சேத யோகம்**

ஒரு ஜாதகத்தில் லக்னத்தில் செவ்வாய் இருந்தால், அதன்மீது ராகு, சனி, சூரியன் ஆகியவற்றின் பார்வை இருந்தால், அதற்குப் பெயர் விச்சேத யோகம். இதில் பிறப்பவர்கள் பெரிய பதவியில் இருக்கும்போது, திடீரென பதவி அவர்களிடமிருந்து போய்விடும்.

**சுய இச்சா ம்ருத் யோகம்**

ஒரு ஜாதகத்தில் கேந்திரத்தில் செவ்வாய், 7-ஆம் பாவத்தில் ராகு இருந் தால், அதற்குப் பெயர் சுய இச்சா ம்ருத் யோகம். இதில் பிறப்பவர்கள் தங்களின் மரணம் எப்படி நடக்க வேண்டும் என்று நினைக்கிறார்களோ அதேபோல நடக்கும்.

## இந்த வாரம்

## உங்களுக்கு கை கொடுப்போர் யார், கைவிடுவோர் யார்?

**11-1-2026 முதல் 17-1-2026 வரை**

இந்த ஏழு நாட்களில் உங்களுக்கு எந்த எண்காரர் கை கொடுப்பார், எந்த எண்காரர் கைவிடுவார் என்கிற குறிப்பு தரப்பட்டுள்ளது. இது பிறந்த தேதியின் அடிப்படையில் தரப்பட்டுள்ள குறிப்பு ஆகும். பிறந்த தேதி தெரியாதவர்கள் அவரவரின் பெயர் எண்களின் அடிப்படையில் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

| உங்கள் எண் | கைகொடுப்போர் எண் | நடுநிலையாளர் எண் | கைவிடுவோர் எண் |
|---|---|---|---|
| 1. | 1, 3, 6, 9 | 2, 5, 8 | 4, 7 |
| 2. | 2, 5, 6, 8 | 1, 3, 4 | 7, 9 |
| 3. | 3, 4, 8, 9 | 1, 2, 6 | 5, 7 |
| 4. | 1, 5, 7, 9 | 3, 4, 6 | 2, 8 |
| 5. | 4, 5, 8, 9 | 2, 3, 6 | 1, 7 |
| 6. | 1, 2, 5, 6 | 4, 7, 8 | 3, 9 |
| 7. | 2, 3, 5, 7 | 1, 4, 6 | 8. 9 |
| 8. | 3, 5, 6, 8 | 2, 4, 9 | 1, 7 |
| 9. | 2, 5, 7, 9 | 1, 4, 8 | 3, 6 |

**பாலாரிஷ்ட யோகம்**

ஒரு ஜாதகத்தில் லக்னத்திலிருந்து 7-ஆம் பாவத்தில் சந்திரன், 8-ஆம் பாவத்தில் பாவ கிரகம், லக்னத்தில் சுக்கிரன், சூரியன் இருந்தால், இந்த யோகம் உண்டாகும். இதில் பிறப்பவர்கள் இளம் வயதிலேயே மரணம் அடைவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

**அனஃபா யோகம்**

ஒரு ஜாதகத்தில் சந்திரனிலிருந்து 12-ஆம் பாவத்தில் சூரியனைத் தவிர, வேறு எந்த கிரகங்கள் இருந்தாலும், இந்த யோகம் உண்டாகும். இதில் பிறப்பவர் கள் அழகான தோற்றத் துடன் இருப்பார்கள். உடல் நலம் நன்றாக இருக்கும். நல்ல பண வரவு இருக்கும். தைரிய குணம் இருக்கும்.

**சுனஃபா யோகம்**

ஒரு ஜாதகத்தில் சந்திரனுக்கு 2-ஆம் பாவத்தில் சூரியனை தவிர, வேறு எந்த கிரகங்கள் இருந்தாலும், இந்த யோகம் உண்டாகும். இதில் பிறப்பவர்கள் தர்ம காரியங்களில் ஈடுபடுவார்கள். சிலர் கலைஞர்களாக இருப்பார்கள். சிலர் இசை மேதைகளாக இருப்பார்கள். அழகான தோற்றம் இருக்கும். பிறரை ஈர்க்கக் கூடியவர் களாக இருப்பார்கள்.

செல்: 98401 11534

# இந்த வாரத்தில் அனுகூலமான நாளும் நேரமும்

**11-1-2026 முதல் 17-1-2026 வரை**

| | |
|---|---|
| **மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம் ஆகிய ராசிக்காரர்களுக்கு:** | |
| 11-1-2026: | காலை 7.00-9.00, 11.00-12.00, பகல் 2.00-4.00 |
| 12-1-2026: | பகல் 12.00-1.00, மாலை 3.00-4.00 |
| 13-1-2026: | காலை 8.00-9.00, பகல் 12.00-1.00, மாலை 4.30-5.00 |
| 14-1-2026: | காலை 6.00-7.00, 9.00-10.00, பகல் 1.30-2.00, மாலை 4.00-5.00 |
| 15-1-2026: | காலை 9.00-11.00, பகல் 1.00-1.30, மாலை 4.00-6.00 |
| 16-1-2026: | காலை 6.00-8.00, 10.00-10.30, பகல் 1.00-3.00, மாலை 5.00-6.00 |
| 17-1-2026: | காலை 7.00-8.00, 10.30-12.00, மாலை 5.00-6.00 |
| **மீன ராசிக்காரர்களுக்கு:** | |
| 14-1-2026: | காலை 6.00-7.00, 9.00-10.00, பகல் 1.30-2.00, மாலை 4.00-5.00 |
| 15-1-2026: | காலை 9.00-11.00, பகல் 1.00-1.30, மாலை 4.00-6.00 |
| 16-1-2026: | காலை 6.00-8.00, 10.00-10.30, பகல் 1.00-3.00, மாலை 5.00-6.00 |
| 17-1-2026: | காலை 7.00-8.00, 10.30-12.00, மாலை 5.00-6.00 |
| **மேஷ ராசிக்காரர்களுக்கு:** | |
| 11-1-2026: | காலை 7.00-9.00, 11.00-12.00, பகல் 2.00-4.00 |
| 12-1-2026: | பகல் 12.00-1.00, மாலை 3.00-4.00 |
| 13-1-2026: | காலை 8.00-9.00, பகல் 12.00-1.00, மாலை 4.30-5.00 |
| 16-1-2026: | காலை 6.00-8.00, 10.00-10.30, பகல் 1.00-3.00, மாலை 5.00-6.00 |
| 17-1-2026: | காலை 7.00-8.00, 10.30-12.00, மாலை 5.00-6.00 |
| **ரிஷப ராசிக்காரர்களுக்கு:** | |
| 11-1-2026: | காலை 7.00-9.00, 11.00-12.00, பகல் 2.00-4.00 |
| 12-1-2026: | பகல் 12.00-1.00, மாலை 3.00-4.00 |
| 13-1-2026: | காலை 8.00-9.00, பகல் 12.00-1.00, மாலை 4.30-5.00 |
| 14-1-2026: | காலை 6.00-7.00, 9.00-10.00, பகல் 1.30-2.00, மாலை 4.00-5.00 |
| 15-1-2026: | காலை 9.00-11.00, பகல் 1.00-1.30, மாலை 4.00-6.00 |



# ஒரே வயதில் திருமணம் செய்யலாமா?

சமுதாயத்தில் அதிகப்படியாக நிலவிக் கொண்டிருக்கும் பிரச்சினைகளில் ஒன்று திருமணத்தடை அல்லது திருமண பிரிவினையாக உள்ளது. திருமணம் நடக்கவில்லையென்று ஒரு பிரிவினர் வருத்தப்பட்டு கொண்டிருக்கிறார்கள். இதே நிலையில் மற்றொரு பிரிவினர் ஏன் திருமணம் நடந்தது என்று பிரிவினையை நோக்கி செல்கிறார்கள். இந்த சூழ்நிலையில் தற்போது காதல் கலப்பு திருமணம் அல்லது பெற்றோர்கள் நிச்சயம் திருமணம் ஒரே வயதில் பிறந்தவர்கள் அல்லது அதிக பட்சம் ஓரிரு நாட்கள் வித்தியாசத்தில் பிறந்த வர்களின் திருமணம் அதிகரித்துவருகிறது.

ஒரே வயது திருமணம் நல்லதா? ஒரே வயதில் திருமணம் செய்யலாமா போன்ற கேள்விகளுக்கு இப்போது விடை காணலாம்.

ஒருகாலத்தில் கணவன்- மனைவிக்கு அதிகபட்சம் 5 முதல் 15, 20 வயது வரைக்கும் வித்தியாசத்தில் திருமணம் செய்தார்கள். ஒரே வயது திருமணம் வெகுசிலருக்கு மட்டுமே நடந்தது. திருமணத்தில் நோக்கமே வம்ச விருத்தியாகும். பெண்கள் 12, 13 வயதில் பருவம் அடைவதால் அவர்களின் உடல் ரீதியாக 16 வயதில் இனப் பெருக்கத்திற்கு தயாராகி விடுகிறார்கள். அதாவது ஆண்களை விட பெண்களுக்கு இந்த ஹார்மோன் மாற்றம் விரைவில் நிகழ்கிறது. இதன்காரணமாக, ஆண்களைவிட அவர்கள் விரைவில் உடல்

ரீதியாக தகுதியானவர்களாக மாறுகிறார்கள். எவ்வளவு வேகமாக அவர்கள் இல்வாழ்க்கைக்கு தயாராகிறார்களோ, அவ்வளவு விரைவில் இல்வாழ்க்கையில் இருந்து மன ரீதியாக உடல்ரீதியாக விடுபடவும் விரும்புகிறார்கள். அதிகபட்சமாக பெண்களுக்கு 45 முதல் 50 வயதிற்குள் மாதவிடாய் சுழற்சியில் நின்றுவிடும். அதன்பிறகு அவர்களுக்கு குடும்ப வாழ்க்கையில் நாட்டம் குறைந்து விடும். ஆனால் ஆண்களுக்கு அதிக காலம் குடும்ப வாழ்க்கை தேவைப்படும். இது போன்ற காரணங்களால் நமது முன்னோர்கள் 10 முதல் 12 வயது வித்தியாசத்தில் திருமணத்தை நடத்தினார்கள். அதாவது- ஆணைவிட பெண் குறைந்தது 10 முதல் 12 வயது குறைவாக இருந்தால் வாழ்க்கை பாதை சிறப்பாக இருக்கும்.

தம்பதிகளுக்குள் நெருக்கம் அதிகமாக இருக்கும். மேலும் வயது வித்தியாசம் அதிகமாக இருக்கும்போது தன்னைவிட சிறிய வயது பெண் என்று ஆண் அனைத்து விஷயங்களிலும் விட்டுக் கொடுத்து செல்வார்கள். ஆணின்மீது பெண்ணுக்கு பரஸ்பர மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். இதிலும் ஒரு குறைபாடும் உள்ளது. ஆணின் வயது அதிகமாக இருக்கும்போது அவர் 10, 15 ஆண்டுகாலம் பின்னோக்கி இருப்பார். கால சூழ்நிலைக்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொள்ள விரும்ப மாட்டார்கள். நவீன கலாச்சாரத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். வயது குறைந்த பெண்களுக்கு நவீன காலத்திற்கு ஏற்ப அழகு, ஆடம்பரம் மற்றும் இல்வாழ்க்கை நாட்டம் மிகுதியாக இருக்கும். காலமாற்றத்திற்கு ஏற்ப கணவர் மாறாமல் பழமையை விரும்புவதால் மனக்கசப்பு வரலாம். அதேபோல் வயது குறைந்த ஆண் வயது அதிகமான பெண்ணை திருமணம் செய்வது புரட்சிகரமாக இருக்கலாம்.

வயது முதிர்ந்த பெண் எளிமையாகவும் கணவரின் உணர்வுகளை புரிந்துகொள்ளும் தன்மை குறைந்தவராகவும் இருப்பார். வயது மூப்பும் அனுபவ ஞானமும் அதிகமாக இருப்பதால் கணவரின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய முடியாது. வயது குறைந்த ஆண் முடிவெடுக்கும் திறன், திட்டமிட்டு செயல்படும் தன்மை, புத்திக் கூர்மை அதிகமாக இருக்கும். ஓரிரு வருடங்கள் வித்தியாசமாக இருந்தால் சிறு சிறு பாதிப்புகள் வரலாம். ஆனால் ஐந்து ஆண்டுக்கு மேல் வயது வித்தியாசம் இருக்கும்போது வயது அதிகம் உள்ள பெண்ணுக்கு ஆளுமை திறன் அதிகமாக இருக்கும். உடல் மற்றும் மன ரீதியான சோர்வுகள் அதிகமாக இருக்கும்.

கல்வி அறிவு, எதையும் எளிதில் புரிந்து கொள்ளும் தன்மை, திட்டமிட்டு செயல்படும் புத்திக்கூர்மை, சிறப்பான முடிவெடுக்கும் திறன் குறையும். தம்பதிகளுக்கு வாழ்க்கைத் துணையைப் பற்றிய எதிர்பார்ப்பு, மனக் கற்பனை அதிகம் இருக்கும். ஒருவரின் எதிர்பார்ப்பை மற்றவர் புரிந்துகொள்ளாமல் இருப்பது தம்பதிகளுக்குள் இணக்கமற்ற மனநிலையை உருவாக்கும். உதாரணமாக தம்பதிகளுக்குள் அதிக வயது வித்தியாசம் இருக்கும் போது அதிக வயது உள்ளவர் பழைய பாடலை கேட்க விரும்புவார். வயது குறைந்தவர் புதிய பாடலை கேட்க விரும்புவார்கள். மற்றபடி ஜாதகத்திலுள்ள கிரகங்களின் நிலைப்பாடுகளுக்கு ஏற்ப அவர்களின் வாழ்க்கை பயணத்தில் மாற்றம் இருக்கும். ஒரு குறிப்பிட்ட கால அளவு வயது வித்தியாசம் இருக்கும்போது ஜாதகம் அவர்களை இயக்கும். அதிகமான வித்தியாசமும் இருக்கக் கூடாது மிகக் குறைவான வித்தியாசமும் இருக்கக்கூடாது.

பழமையும் புதுமையும் ஒன்றுசேர முடியாது. குறைந்தபட்சம் ஒரு ஐந்து வருட காலம் வித்தியாசம் இருந்தால் ஒருவரின் தவறை மற்றவர் திருத்த முடியும். எல்லா விதத்திலும் புதுமையாக இருந்தால் பழமைக்கு மதிப்பு இல்லை. காலத்திற்கு ஏற்ப மாற்றம் தேவைப்பட்டாலும் சமுதாயத்திற்கு தேவையான கட்டுப்பாடும் அவசியமானது.



**பிரசன்ன ஜோதிடர் ஐ. ஆனந்தி**

வயது வித்தியாசம் குறைவாக உள்ளவர்களுக்குள் ஈகோ அதிகமாக தலை தூக்கும்.

தற்போது ட்ரெண்டிங்காக சம வயது திருமணம் மிக அதிகமாகிக் கொண்டிருக்கிறது. கடந்த வாரத்தில் ஒரு வாரம் பத்து நாள் ஒரு மாதம் வித்தியாசத்தில் பிறந்து திருமணம் முடித்த நான்கு ஜாதகம் பார்த்தேன். அதில் மூன்று ஜாதகம் குழந்தை பாக்கியம் இல்லாத காரணத்தால் விவாகரத்து வழக்கு பதிவாகியுள்ளது. ஒருவர் மட்டும் பொருளாதாரரீதியான பிரச்சினைக்காக பார்த்த ஜாதகம்.

சம வயதில் திருமணம் செய்யும்போது இருவரின் மனநிலையும் ஒன்றுபோல் இருக்கும். இருவருக்கும் ஒரே வயது என்பதால் காலத்திற்கு ஏற்பபோல் அவர்களின் மனநிலை இருக்கும். உணவு பழக்க வழக்கம் நண்பர்களோடு பழகும் தன்மை மாறுபடாது. ஜாதகத்தில் வருட கிரகங்கள் ஒரே நிலையில் இருக்கும். சம வயது என்பதால் இருவருக்கும் ஒரேவிதமான என்ன ஓட்டம் மனநிலை இருக்கும். வருட கிரகங்கள் மாத கிரகங்கள் ஒரே நட்சத்திர பாதத்தில் பயணிக்கும் வாய்ப்பு அதிகமுண்டு. சில மாதங்கள் வித்தியாசம் இருந்தால் வருட கிரகங்கள் வேறு நட்சத்திர பாதங்களில் சஞ்சரிக்கும் தம்பதிகளின் ஜாதகத்தில் வருட கிரகங்கள் ஒரே இடத்தில் சஞ்சரித்தால் ஒரே ராசி கட்டத்தில் சஞ்சரித்தால் எந்த ஒரு முடிவு எடுக்கும்போதும் தம்பதிகளிடையே கருத்து ஒற்றுமை இருக்கும். சில நேரங்களில் தம்பதிகள் தங்களுக்குள் சதா சண்டையிட்டுக் கொண்டிருப்பார்கள். அவர்களுக்குள் கருத்து வேறுபாடு இருப்பதுபோல் தோன்றினாலும், உண்மையில் அவர்களுக்குள் அன்யோன்யம் அதிகமாக இருக்கும். பரஸ்பரம் புரிந்து கொள்ளும் தன்மையும் பிறரைவிட அதிகமாகக் கொண்டிருப்பார்கள். சுய ஜாதகத்திலுள்ள கிரகங்களை கோட்சார கிரகங்கள் கடக்கும் போது சுபவிதமான சம்பவங்கள் நடந்தால் இரட்டிப்பான மகிழ்ச்சி இருக்கும்.

அசுபவிதமான சம்பவங்கள் நடந்தால் கடன், நோயால் குடும்பத்தில் நிம்மதியின்மை, அதிர்ஷ்ட குறைவு, சிந்தனை குறைபாடு, வம்பு, வழக்கு, வாழ்க்கை துணையிடம் இணக்கமற்ற சூழல், புத்திரப் பேரின்மை, தொழில்ரீதியான பிரிவினை, கருத்து வேறுபாட்டால் பிரிவினை போன்ற வற்றை உண்டாகும். ஒரு குறிப்பிட்ட வயதை கடக்கும்போது ஆண் தன்னை இளமையாக உணருவான். பெண்களுக்கு வயது கூடியது போன்ற உணர்வு வரும். திருமணமான குறுகிய காலத்தில் சில இன்பங்களை கொடுத்தாலும் வயது கூடகூட முதிர்ச்சியும் பக்குவமும் பெண்ணுக்கு வெகுவிரைவில் கிடைக்கும். ஆணுக்கு காலதாமதமாகவே முதுமை வரும். ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குபிறகு இருவரிடம் சகிப்புத்தன்மையை விட்டுக் கொடுத்தும் தன்மை இல்லாமல் ஒத்துப் போக முடியாது.இதை ஒரு உதாரண ஜாதகத்துடன் பார்க்கலாம்.

**ஆண் ஜாதகம்**

| | | | |
|---|---|---|---|
| ல / சந்திரன் | | | செவ்வாய் கேது |
| | ராசி | | |
| சனி | | | |
| ராகு | | புதன் சுக்கிரன் மாந்தி | சூரியன் குரு |

## பெண் ஜாதகம்

*12-10-1992, காலை 4.07 மணி, மதுரை,* ***ராசி:*** *ரேவதி 4- மீனம் (கண்டாந்த நட்சத்திர பாதம்)* ***லக்னம்:*** *சிம்மம் நடப்பில் சூரிய தசை (மார்ச் 2029 வரை) குரு புக்தி (ஜனவரி 2026 வரை).*

## ஆண் ஜாதகம்

*10-10-1992, மாலை 5.27 மணி, மதுரை.* ***ராசி:*** *உத்திரட்டாதி 2- மீனம்.* ***லக்னம்:*** *மீனம், நடப்பில் கேது தசை ஜனவரி 2027, சனி புக்தி 2026. ஜனவரிவரை இருவரும் ஒரே ராசி என்பதால் கோட்சார கிரகங்கள் ராசியை கடக்கும்பொழுது சுபம்- அசுபம் இரண்டும் இருவரையும் சம விகிதத்தில் தாக்கும். தற்போது மீன ராசிக்கு ஜென்ம சனி என்பதால் கருத்து வேறுபாடு அதிகமாக உள்ளது.*

*ஆண்- பெண் இருவரின் லக்னமும் சஷ்டாஷ்டக லக்னமாக உள்ளது. எண்ணங்களில் வேற்றுமை உணர்வு உண்டாகிறது.*

தம்பதிகளுக்கு பகை கிரகங்களின் தசைகள் பகையை அதிகப்படுத்தும். கடுமையான மன உளைச்சலை ஏற்படுத்தும். திருமண வாழ்க்கையே வேண்டாம் என்று தனிமையை விரும்புகிறார்கள்.

தற்போது திருமணப் பிரிவினைக்கு குழந்தை பாக்கியம் இன்மையே அதிக காரணமாக உள்ளது.

ஒரு தம்பதிகளுக்கு கரு உருவாக சூரியனின் தயவு வேண்டும். கரு உருவாகியபிறகு அதை குழந்தையாக உருமாற குருவின் அருள் வேண்டும். அத்துடன் 1, 5, 9 எனக் கூடிய திரிகோணங்கள் பலம் பெறுவது அவசியமாகும்.

இவர்களின் ஜாதகத்தில் சூரியன் குரு இரண்டும் ராகு- கேதுக்களின் மையப் புள்ளியில் உள்ளது. ராகு- கேதுக்களின் மையப் புள்ளியில் உள்ள கிரகம் வாழ்நாள் முழுவதும் ஒருவருக்கு தொடர்ந்து பிரச்சனை களை ஏற்படுத்திக்கொண்டே இருக்கும். அது சார்ந்த விஷயங் களில் ஜாதகருக்கு தீராத- தீர்க்க முடியாத சங்கடங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும்.

**பெண் ஜாதகம்**

| | | | |
|---|---|---|---|
| சந்திரன் | | | செவ்வாய் கேது மாந்தி |
| | ராசி | | |
| சனி | | | ல/ |
| ராகு | | புதன் சுக்கிரன் | சூரியன் குரு |

இருவர் ஜாதகத்திலும் சூரியன் மற்றும் குருவிற்கு செவ்வாயின் பார்வை உள்ளது. சூரியன் மற்றும் குருவிற்கு திரிகோணத்தில் சனிபகவான் உள்ளார்.

பெண் ஜாதகத்தில் ஐந்தாம் இடத்தில் ராகு பகவான் உள்ளார்.

ஆண் ஜாதகத்தில் ஐந்தாம் இடத்தை சனி பகவான் பார்க்கிறார்.

இப்படி எந்த விதத்திலும் பொருத்தம் இல்லாமல் விருப்ப விவாகம் செய்து கொண்டவர்கள். கண்டாந்தர நட்சத்திர பாதத்தில் ஒரு பெண் பிறந்தால் தனக் குத்தானே அழிவை ஏற்படுத்திக் கொள்வார். பிடிவாதமாக காதல் திருமணம் செய்துகொண்டதன் வினையை அனுபவிக்கிறார்.

ஒரு ஆணுக்கு பெண்ணுக்கோ கடவுள் வழங்கக்கூடிய அதிகபட்ச தண்டனை வாழ்க்கை துணையாகும்.

மேலும் ஒரு ஜாதகத்தில் குழந்தை பாக்கியத்தை நிர்ணயிப்பதில் சப்தமாம் சத்தின் **D7** பங்கு அளப்பரியது. என்னைப் பொறுத்தவரை நம்மை நம்பிவரும் வாடிக்கையாளர்களுக்கு. ஆகாது முடியாது இல்லையென்ற பதில் கூறுவதை நான் விரும்புவதில்லை.

பிரச்சினை நடந்தபிறகு தீர்வுகாண முயல்வதைவிட ஒருசெயலை செய்வதற்கு முன்பு அதன் நன்மை- தீமைகளை பகுத்தாய்வது உத்தமம்.

குழந்தை பாக்கியம் பற்றி அறிய உதவும் வர்க்க சக்கரம் சப்தாம்சம் **D7**.

ஒருராசியை ஏழு சமபாகங்களாகப் பிரித்து சப்தாம்ச சக்கரம் உருவாக்கப்படுகிறது. இதன்மூலம் குழந்தை பாக்கியத்திற்கான பலனை துல்லியமாக அறியமுடியும்.

கரு உருவாகுதல், குழந்தையின் பாலினம், பிறப்பு மற்றும் கடந்த கால கர்ம வினைகளின் தாக்கங்களை அறிய உதவுகிறது.

திருமணம் என்பது மனித வாழ்வில் மிக முக்கியமான நிகழ்வாகும். இரு உறவுகளின் நட்பு நிலையை நிர்ணயிப்பதில் திருமணப் பொருத்தம் மிக முக்கிய பங்குவகிக்கிறது. அதாவது- லக்னம் என்பது ஜாதகரின் குணாதிசயத்தையும், ஏழாம் இடம் என்பது அவரது தொடர்பாளர்களின் குணங்களையும் குறிக்கும். இந்த இருவர் ஜாதகத்திலும் இயலாமை ஒருவர்மேல் ஒருவருக்கு வெறுப்ப வர காரணமாக அமைந்துவிட்டது.

சப்தமாம்சம் என்ற வர்க்கச் சக்கரம்மூலமாக இருவருக்கும் குழந்தை பாக்கியம் கிடைக்கக்கூடிய காலத்தை நிர்ணயம் பண்ணி கூறப்பட்டுள்ளது. அதுவரை பொறுமையாக இறைவழிபாட்டில் ஆர்வம் செலுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

செல்: 98652 20406

# ஜோதிட சந்தேகங்கள்!

**ஆர். தங்கவேலு,** பரமக்குடி.

**ம**கள் சரண்யாவிற்கு 15-12-2025-ல் குழந்தை பிறந்திருக்கிறது. எந்த எண்ணில் பெயர் அமைக்க வேண்டும் எனக் கேட்டுள்ளார்.

குழந்தை பிறந்த தேதி 15-12-2025. விதி எண்: 18= 1+8=9 இது செவ்வாயைக் குறிக்கும்.

பிறப்பு எண்: 15 = 1+5 = 6 இது சுக்கிரனைக் குறிக்கும்.

குழந்தையின் ஜாதகப்படி, சுக்கிரன் சுமார் நிலையில் உள்ளார். எனவே பெயர் 6-ஆம் எண்ணில் வருமாறு அமைத்துக்கொள்ளவும்.

குழந்தையை, கோவிலில் தத்து கொடுத்து வாங்கச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், சந்திரன் பாபகர்த்தாரி இருந்தால் மட்டுமே இவ்விதம் செய்ய வேண்டும். இந்த குழந்தைக்கு சந்திரன், குரு பார்வையில் உள்ளார். எனவே தத்து பரிகாரம் தேவையில்லை.

குலதெய்வத்தை வேண்டிக்கொண்டு காணிக்கை செலுத்தவும்.

**ஜி. குமரேசன்,** சேலம்.

**அ**வருடைய பெண் குழந்தை பற்றி கேட்டுள்ளார். 3-6-2015-ல் பிறந்த குழந்தை.

குரு+சுக்கிரன் = 12-ஆமிடத்தில் மறைந்து இருக்கிறதே. இது நல்லதா எனக் கேட்டுள்ளார்.

சுக்கிரன் 12-ஆமிடத்தில் இருப்பது ஏற்கக் கூடியது. குரு 12-ஆமிடத்தில் உச்சம். கெட்டது கிடையாது.

2028-ல் சுக்கிர தசை ஆரம்பிக்கும். அப்போது கல்வி சார்ந்து இடம் மாறுதல் இருக்கும்.

சிம்ம லக்னத்திற்கு 4-ஆமிடத்தில் சனி+சந்திரன்= புனர்பூச தோஷ பாதிப்பு உண்டு.

லக்னத்திற்கு 2-ல் ராகு, 8-ல் கேது. நாக தோஷம் மற்றும் ராசிக்கு 7-ல் செவ்வாய். திருமண வாழ்வில் சற்று சலசலப்பு இருக்கும்.

நடப்பு கேது தசை- விநாயகரை வணங்கவும்.

**கோபி,** பெங்களூர்.

**தி**ருமணம் எப்போது நடைபெறும்?

25-12-1987-ல் பிறந்தவர். கும்ப லக்னம், கும்ப ராசி, சதய நட்சத்திரம். கால சர்ப்ப தோஷ ஜாதகம். இவருக்கு ஏற்கெனவே ஒரு விருப்பத் திருமணம் நடந்து பிரிந்திருக்கக் கூடும்.

நடப்பு சனி தசையில் சூரிய புக்தி 2027 பிப்ரவரி வரை. அதற்குள் திருமணம் நடந்துவிடும். வரும் பெண் திருமண வாழ்வில் தோல்வி அடைந்த வராக இருப்பார்.

இவருடைய ஜாதகப்படி, புனர்பூ தோஷம் இருப்பதால் இருதார திருமணம் நடக்கிறது.

நடப்பு சனி தசை நல்ல பலன் தர, முனீஸ்வரன் போன்ற தெய்வங் களையும், குலதெய்வத்தையும் வணங்க வேண்டும்.

கும்ப ராசிக்கு, ஏழரைச்சனி ஓடுவதால், சனிக்கிழமைகளில் சனீஸ் வரரை வணங்கவேண்டும்.

**சுப்பிரமணியன்,** மதுரை.

**த**ன் மகளின் திருமணம் பற்றி கேட்டுள்ளார்.

**மகள்:** தேவி: 4-1-1997-ல் பிறந்த வர். மிதுன லக்னம், துலா ராசி, விசாக நட்சத்திரம். லக்னத்துக்கு 4-லும், ராசிக்கு 12-லும் செவ்வாய் அமர்ந்துள்ளார். எனவே இரு வகையிலும் செவ்வாய் தோஷம் உள்ளது.



நடப்பு சனி தசையில் செவ்வாய் புக்தி 2026 மேவரை. அதற்குள் இந்தப் பெண்ணிற்கு திருமணம் நடந்துவிடும். இந்தப் பெண்ணின் மாங்கல்ய ஸ்தானத்தில், குரு நீசமாகி இருப்ப தால் தாலி தானம் செய்த பிறகு திருமணம் நடத்தவும்.

**அன்பு,** மேலூர்.

**வே**லை, பணவரவு பற்றிக் கேட்டுள்ளார்.

23-12-1984-ல் பிறந்தவர். கன்னி லக்னம், தனுசு ராசி, மூல நட்சத்திரம். உங்கள் ஜாதகத்தில் 6-ஆமதிபதி சனியும், செவ்வாயும் பரிவர்த்தனை. மேலும் 8-ஆமதிபதி செவ்வாய் 6-ல் மறைவு. இதுவொரு யோகத்தைக் குறிக்கும். வேலையில் ஏற்படும் தடங்கல்கள் அதுவாகவே நீங்கிவிடும். எனவே சிறு சங்கடம் வந்தாலும், அதனை சமாளித்துத் தொடருங்கள். உங்களுக்குப் பண வரவு, 'வரும்; ஆனா வராது' என்ற நிலையில் மெதுவாக வரும். நடப்பு செவ்வாய் தசை ராகு புக்தி. வேலை மாறுதல் உண்டு. 2024 வரை ராகு புக்தி; கவனம்தேவை.

நிரந்தர வேலை வேண்டுபவர்கள் முசிறி-திருத்தலையூர் சென்று வணங்கவும்.

**சந்திரசேகர்,** விழுப்புரம்

**கு**டும்பத்தைப் பிரிந்து வாழும் இவர் எப்போது ஒன்று சேர்வோம் என கேட்டுள்ளார்?

31-8-1977-ல் பிறந்தவர். துலா லக்னம், மீன ராசி, பூரட்டாதி நட்சத்திரம். லக்னாதிபதி சுக்கிரன், சனியுடன் சேர்க்கை. உங்கள் ஜாதகத்தில் செவ்வாயும் சனியும் ராகுவுடன் சம்பந்தம். சந்திரன் கேதுவுடன் ராகு பார்வையில். எனவே உங்கள் சிந்தனைகள் ஒரு நிலையில் இருக்காது. 2023, நவம்பரில் சுக்கிர தசை ஆரம்பம். அப்போது உடல்நிலையில் கவனம் எடுத்துக்கொள்வது அவசியம். சுக்கிர தசையில் மனைவி, மகனுடன் சேரும் பாக்கியம் ஏற்படும்.

மண வாழ்க்கை சிறப்படைய, திருமருகல் எனும் தலத்திற்குச் சென்று வணங்கவும்.

●

“அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை
பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை” என்கிறது வள்ளுவம்.

இந்த அருளையும், பொருளையும், நம் கரம் சேர்க்கும் தத்துவம் மகாலட்சுமி திருமால் தத்துவமாகும்.

இதன் அடிப்படையில் புவிசார் வாழ்வியலில் பொருள்களின் ஆளுமை பெரியது என்பது அனைவரும் அறிந்ததே.

செல்வ செழிப்பின் ஆணிவேர் மகாலட்சுமி தாயார்தான். அந்த இயக்க சக்தியுடன் ஒத்திசைவாக செல்வது நம்மை செல்வ செழிப்பாக நிலை நிறுத்தும் என்பது உறுதி. ஆனால் மற்ற தெய்வங்களின் ஆற்றலை கையாள்வதுபோல் இந்த தாயாரின் ஆற்றலை கையாள்வது மிக கடினம்.

ஓரிடத்தில் தன்னை நிலை நிறுத்த முடியாத ஆற்றலின் ஓட்டமாகும் இந்த தாயாரின்



# அருளும், பொருளும்...

சக்தி. அதனால்தான் ஒருவரிடமே செல்வம் தங்காமல் அடுத்தடுத்த இடங்களுக்கு தன்னை கடத்தி இணைத்துக் கொள்கின்றது.

சரி; இந்த தன்மையை எவ்வாறு கையாள வேண்டும் நம்மிடமே அந்த அன்னையை எப்படி நிலை நிறுத்திக்கொள்வது என்பதை பற்றி காணலாம்.

மகாலட்சுமி தாயாருக்கு சாஸ்திரரீதியாக 18 புதல்வர்கள் இருப்பதாக கூறப்பட்டுள்ளது நம்மில் பலருக்கு தெரியாத இந்த விஷயம் வடமாநிலத்தில் ஒரு தரப்பினருக்கு மட்டும் மிகத் தெளிவாகத் தெரியும். அதனால்தான் அவர்கள் செல்வ செழிப்புடன் நிலைத்திருக்க காரணமாகிறது.

அதன் அடிப்படையில்தான் அவர்களுக்கு பொன்னும், பொருளும், குவிந்துகொண்டே இருக்கின்றது.

அப்படி என்ன? என்கின்ற ஆர்வத்திற்கு பதில் இதோ.

ஒரு தாய்க்கு மகிழ்ச்சி எப்பொழுது சித்திக்கும்?

தான் சுமந்து ஈன்ற குழந்தைகளை மற்றவர்கள் போற்றும் பொழுது குழந்தைகள்மீது பரிவும், பாசமும், போற்றுகின்றவர்கள் மீது கருணையும், ஈர்ப்பும், பிறப்பது இயல்பு அல்லவா? இதைதான் வடமாநில சகோதரர்கள் உபயோகப்படுத்திக் கொள்கின்றார்கள்.

இதன் அடிப்படையில் தாயாரின் புதல்வர்களின் வழிபாடானது அன்னையின்

**வடமாநிலத்தில் ஒரு தரப்பினருக்கு மட்டும் மிகத் தெளிவாகத் தெரியும். அதனால்தான் அவர்கள் செல்வ செழிப்புடன் நிலைத்திருக்க காரணமாகிறது.**

அருள் மழையில் நம்மை இணைக்கும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

அவளிடம் இருந்து தேவையான வரங்களை பெற்றுக்கொள்ள இந்த 18 புதல்வர்களின் நாமத்தை முதலில் நாம் தெரிந்துகொள்ள வேண்டாமா? இதோ பெயர்கள்.

1. ஓம் தேவசகாய நம
2. ஓம் சிக்லிதாய நம
3. ஓம் ஆனந்தாய நம
4. ஓம் கர்த்மாய நம
5. ஓம் ஸ்ரீ ப்ராதாய நம
6. ஓம் ஜாத் வேதாய நம
7. ஓம் அனுராகாய நம
8. ஓம் சம்வாதாய நம
9. ஓம் விஜயாய நம
10. ஓம் வல்லபாய நம
11. ஓம் மதாய நம
12. ஓம் ஹர்ஷாய நம
13. ஓம் பாலாய நம
14. ஓம் தேஜஸ நம
15. ஓம் தம்காய நம
16. ஓம் சலிலாய நம
17. ஓம் குல்குலாய நம
18. ஓம் குருந்தகாய நம

என்கின்ற நாமங்களில் இந்த புதல்வர்களின் பெயர் நிறைந்துள்ளது.

இதை எப்படி உபயோகம் செய்வது என்பதைக் காணலாம்.

தினமும் இந்த 18 நாமங்களையும், ஒருமுறை காலை எழுந்தவுடன் பூஜையறையில் அமர்ந்து சொல்வது மிக சிறப்பு.

காலையில் குளித்துவிட்டு இந்த நாமங்களை ஒருமுறை படித்தால் போதும் உங்களின் பணம் சம்பந்தப்பட்ட அத்தனை விஷயங்களும் தீர்ந்துவிடும் என்பது உறுதி.

தினமும் கூற முடியாதவர்கள் வெள்ளிக்கிழமையன்று பூஜையறையில் இந்த பெயர்களை உச்சரித்துவர செல்வ செழிப்பு மேலோங்கும். குறிப்பாக 21 வெள்ளிக்கிழமைகள் கட்டாயம் இந்த நாமங்களை ஏழு முறையாவது ஜெபிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒருவேளை உங்களின் ஜாதக ரீதியாக 6, 8 பாவகங்களில் தொடர்பில் தசையில் இருக்கும் பொழுது கடன் சார்ந்த விஷயங்கள் அதிகரிக்கும் என்பது உறுதி யல்லவா? அந்த சூழலில் இருந்தும் இந்த வழிபாடு உங்களை காப்பாற்றும்.

ஒரு ஜாதகத்தில் சுக்கிரன்+சனி நினைவு என்பது ஏதோ ஒரு வகையில் பணத்தை நிர்வகிக்கும் தன்மையை நமக்கு வழங்கிவிடும். இவர்களும் இந்த மந்திரத்தை உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

உங்களின் நியாயமான பொருள் ஆசைகள் நிறைவேறுவதற்கு இந்த வழிபாடு நிச்சயம் வழிவகுக்கும் என்பது உறுதி.

செல்: 80563 79988



மேல்மருவத்தூர் **எஸ். கலைவாணி**

# பொங்கல் பண்டிகையும், முன்னோர் வழிபாடும்...

வீட்டிற்குள் பொங்கல் வைத்து படைப்பது, பழைய பாத்திரங்களில், குக்கரில் பொங்கல் வைத்து, கடவுளை பிரார்த்தனை செய்து வணங்கி படைப்பது, வீட்டிற்குள்ளேயே படைப்பது, பொங்கல் பண்டிகை அல்ல; தமிழர் பண்டிகை அல்ல.

இன்றையநாளில் முற்பிறவி பாவ-சாபங்களை இறைவழிபாடு, பூஜை, ஹோமம், யாகம், புண்ணிய நதிகளில் நீராடல், தன்னிடமுள்ள பணம், பொருட்களை பிறர்க்கு தான, தர்மம் செய்தல் என இன்னும் பலவழிமுறைகளில் நம்பிக்கை சார்ந்த செயல்களைச் செய்தால் ஊழ்வினை உறுத்தாது, பாவ- சாபம் தீர்ந்துவிடும், வாழ்வில் தடைகள் விலகும் என்று கால, காலமாகக் கூறிக்கொண்டு செயல்பட்டு வருகின்றார்கள். ஆனால் இந்த செயல்களைச் செய்ததால் பாவம் தீர்ந்ததா? நல்ல பலன் கிடைத்ததா? என்பது இதுபோன்ற பரிகாரங்களைச் செய்தவர்களுக்குத்தான் உண்மை தெரியும்.

ஆதிகாலத்தில் நம் தமிழ் மக்களிடையே திதி கொடுக்கும் பழக்கமில்லை. இதனை தாயுமான சுவாமிகள்.

**"வடக்கில் இருந்து வல்லான் ஒருவன் வரவும் திராவிடத்தில் வந்ததாக கூறுவேன்"**

என்று ஒரு பாடலில் கூறுகின்றார்.

தமிழ் மக்களின் முன்னோர் வழிபாட்டினை தென்புலத்தார் வழிபாடு என்று கூறுவார்கள். இந்த வழிபாட்டு முறையை தமிழ் மக்களுக்கு வகுத்துக் கூறியவர், தமிழ் மொழியை உருவாக்கி, தமிழர்களுக்கு என்று தனித்த நாகரிகம், பண்பாடு, கலாசாரம், வழிபாடு என அனைத்தையும் வகுத்து தந்தவர், தமிழர்களின் ஆசானும் முன்னோடியுமான அகத்தியர் பெருமான்தான்.

இன்றையநாளில் மனிதர்கள் தங்களுக்குத் தாங்களே உருவாக்கிக்கொண்ட கோடிக் கணக்கான தெய்வங்கள், அவற்றுக்கு நாள், நட்சத்திரம், திதி, நேரம் என்று குறிப்பிட்டு, எண்ணிலடங்காத பூஜை, யாகம், வழிபாடு, பண்டிகை, உற்சவங்கள், திருவிழாக்கள் என கொண்டாடிவருகின்றோம். ஆனால் ஆதி நாளில் தமிழ்மக்களுக்கு அகத்தியர் கூறிய ஒரே தெய்வம் எது? ஒரே பண்டிகை எது? என்று அறிவோம்.

**"ஆடுகின்ற தேவதைகள் அப்பா கேளு அரிய தந்தை இனம் சேருமென்று கோனார்"**

இம்மக்கள் கட்டையிலும், செம்பிலும், மண்ணிலும் கல்லிலும் பலவிதமான உருவங்களை செய்து, அவற்றை தேரில் வைத்து தெய்வம், தேவதை என்று கூறிக்கொண்டு, தோளிலும் தலையிலும் தூக்கிக்கொண்டு ஆடுகின்றார்களே அவைகளா உங்கள் கஷ்டம் தீர்த்து காப்பாற்றும் தெய்வங்கள்? வம்சத்தில் உண்டான முற்பிறவி பாவ-சாபங்களை நீக்கி, உங்கள் வாழ்வை உயர்த்தி

**சித்தர்தாசன் சுந்தர்ஜி** ஜீவநாடி (ஊழ்வினை ஆய்வு) ஜோதிடர்



வைக்கும் சக்திகள் அவை இல்லை என்கிறார் அகத்தியர்.

மனிதர்களின் முற்பிறவி, கர்மவினை பாவ-சாபங்களை நீக்கி, இப்பிறவி வாழ்வில் உயர்ந்த நிலையை அடையச் செய்யும் தெய்வம் உங்கள் வம்ச முன்னோர்கள்தான். நம்மை உருவாக்கி, இந்த பூமியில் பிறந்து காப்பாற்றி வளர்த்து ஆளாக்கியவர்கள் நம்மைப் பெற்ற தாய், தந்தை, வம்ச முன்னோர்களின் ஆத்மாக்கள் தான். குடும்பத்தையும், வம்சவாரிசுகளையும், வாழ்வில் உண்டாகும் அனைத்து தடை, கஷ்டங்களையும், தொழில், பணம், பதவி என அனைத்தையும் தந்து, நல்ல வாழ்வை அடைய, நமது முன்னோர்களை தெய்வமாக, வழிபட்டுவாருங்கள் என்கிறார் அகத்தியர்.

## –அகத்தியர் கூறும் பொங்கல் வழிபாட்டு முறைகள்!

ஒரு மனிதனுக்கு பாவமும், சாபமும், புண்ணிய பலனும் அவரவர் குடும்பத்து உறவுகளுக்கு, நாம் செய்யும் நன்மை- தீமை செயல்கள்மூலம்தான் உருவாகின்றதே தவிர, வேறு இடத்தில் இருந்து, வேறு மனிதர்களிடம் இருந்து இல்லை. நமது முற்பிறவிகளில் எந்த, எந்த குடும்ப உறவிற்கு பாவம், தீமைகள் செய்தோமோ; நமது செயல்களால் எந்த உறவு பாதிக்கப்பட்டதோ அந்த குடும்ப உறவினர் மனம் வெறுத்துவிட்ட அந்த ஆத்மாவின் சாபம், நிவர்த்தியாக, அந்த உறவு ஆத்மாவிடம் இப்பிறவியில் சாப நிவர்த்தி வேண்டி பிரார்த்

தனை செய்தால்தான், நல்ல பலன் கிடைக்கும், சாப விமோசனம் கிடைக்கும்.

வம்ச முன்னோர்கள் காலத்தில் உருவாகி, அடுத்தடுத்த பிறவிகளில் தொடர்ந்துவந்து, பலவிதமாக சூட்சுமமாக செயல்பட்டு துன்பங்களைத் தரும் பாவ- சாப- பாதிப்புகள் விலக, எந்த உறவு, சாபமிட்டதோ, அந்த முன்னோர் ஆத்மாவை, பிரார்த்தனை செய்தால்தான், அது மன்னித்து, மனமிரங்கி, சாப நிவர்த்தியை தரமுடியும். வேறு எந்த சக்தியாலும், எந்த வழிபாடுகளாலும், தான, தர்ம செயல்களாலும் சாப நிவர்த்தியை அடையமுடியாது என்கிறார் அகத்தியர்.

தென்புலத்தார் (முன்னோர்) வழிபாட்டினை எந்த நாளில்? எந்த நேரத்தில்? எப்படி செய்வது?

வருடா, வருடம் தை மாதம் 1-ஆம் தேதி, வரும் தைப்பொங்கல் நாள் அன்று, விடியற்காலை 5.30 மணிக்கு தொடங்கி, காலை 7.00 மணிக்குள் இந்த முன்னோர் வழிபாட்டினை செய்து முடித்துவிட வேண்டும். விடியற்காலை 5.30 மணிக்கு, வீட்டின் முன்வாசலில், வீட்டின் வெளியில் பொங்கல் வைக்கவேண்டும்.

பொங்கல் வைக்க, வீட்டிலுள்ள பழைய பாத்திரங்களைப் பயன்படுத்தக்கூடாது. வழிபாட்டிற்கு சர்க்கரை பொங்கல் அல்லது வெண்பொங்கல் என ஏதாவது ஒன்றை அவரவர் விருப்பம்போல் வைத்துக் கொள்ளலாம். பொங்கல் வைத்தபின்பு வீட்டின் வெளியே முன்வாசலில், ஒரு வாழை இலையை எடுத்து, வாழை இலையின் நுனி வடக்கு பக்கம், வடக்கு நோக்கி இருக்குமாறும், இலையின் அறுத்த அடிப்பகுதி, தெற்குபுறம் இருப்பதுபோல், தெற்கு, வடக்காக இலையைப் போட வேண்டும்.

படையலுக்காகப் போடப்பட்ட வாழை இலையின் தெற்கு பக்கம் விளக்கேற்றி வைத்து, பொங்கல் பானையை வைக்கவேண்டும். வாழை இலை படையலில், வேஷ்டி, துண்டு, சேலை, ஜாக்கெட், 2 தேங்காய், 1 சீப்பு வாழைப் பழம், வெற்றிலை, பாக்கு, பத்தி, சூடம், சாம்பிராணி, பூ, படையல் இலையில் பொங்கல் சாதம் வைத்தும், இன்னும் குடும்பத்தில் கணவன்- மனைவி இருவரின் வம்சத்தில் இறந்துபோன முன்னோர்கள் படம், போட்டோ இருந்தால் அவற்றை துடைத்து, பொட்டிட்டு, பூ சாற்றி படையலில் தெய்வமாக வைத்துக்கொள்ளவேண்டும். போட்டோ, படம் ஏதுமில்லை என்றால் பரவாயில்லை.

வாழை இலையில் படையல் தயார்செய்து வைத்து முடித்தவுடன், சாம்பிராணி தூப புகை போட்டு, அதில் இரண்டு தேங்காய் களையும் காட்டி, அவற்றை உடைத்து வைத்த பின், குடும்ப உறுப்பினர்கள், படையலுக்கு எதிர்புறம் அதாவது படையலுக்கு வடக்கு பக்கம், தெற்கு நோக்கி நின்று கொண்டு, எந்த கடவுளையும், தெய்வத்தையும், ஏன்? குலதெய்வத்தைக்கூட மனதில் நினைக் காமல், தெய்வங்களை வேண்டிக்கொண்டு, பிரார்த்தனை வழிபாடு செய்யாமல், அவரவர் வம்ச முன்னோர்களையே தெய்வங்களாக நினைத்து பிரார்த்தனை செய்து வழிபட வேண்டும்.

முன்னோர் வழிபாடு செய்தபின்பு வேஷ்டி, துண்டினை கணவனும் சேலை ஜாக்கெட்டை, மனைவியும் உடுத்திக்கொள்ளவேண்டும். வேறு யாருக்கும் தரக்கூடாது.

கணவன்- மனைவி இருவரும், அவரவர் பிறந்த குடும்பத்தைச் சேர்ந்த, வம்சத்தில் இறந்துபோன தங்கள் முன்னோர்களை, அதாவது கணவன் அவரது வம்ச முன்னோர் களையும், மனைவி அவள் பிறந்த குடும்பத்து முன்னோர்களையும்தான் பிரார்த்தனை செய்து வழிபடவேண்டும்.

கணவன்- மனைவி இருவரும் குடும்ப உறவுகளை தெய்வமாக வணங்குவதால் வம்சத்தில் உண்டான பாவ- சாப- தோஷங் கள் படியாகக் குறைந்துவரும்.

21 தலைமுறையைச் சேர்ந்த தாய்வழி, தந்தைவழி முன்னோர்களை வம்சத்தில் உண்டான பாவ- சாப நிவர்த்தியாகவும் தன் குடும்பத்திலுள்ள கடன், நோய், எதிரி, பகை, குடும்ப குழப்பம், புத்திரத் தடை, திருமணத்தடை, என அனைத்து சிரமங்களும் நீங்கி நல்ல வாழ்க்கை அமைய வேண்டும் என்று பிரார்த்தனை செய்ய வேண்டும்.

முற்பிறவியில், முன்னோர்கள் காலத்தில், தொழில், விவசாயத்தில் இணைந்து, உழைத்து நம்மைக் காப்பாற்றிய, பசு, பறவை, மிருகங்களை தெய்வமாக பிரார்த்தனை செய்து வணங்கவேண்டும். இதனால் பறவை, மிருகங்களை கொன்ற பாவம், அவற்றை அடித்து துன்புறத்தி வதை செய்த பாவங்கள் நிவர்த்தியாகும். மாடு, மனை, பால்பாக்கியம் செல்வம் விருத்தியாகும். பிரம்மஹத்தி தோஷம் விலகும்.

தென்புலத்தார் (முன்னோர்) வழிபாட்டிற்கு, வீட்டிலுள்ள, பயன்படுத்திய பழைய பாத்திரங்களில் பொங்கல் வைக்கக்கூடாது. புதியதாக பொங்கல் பானை, அதை மூடும் தட்டு, கரண்டி இவற்றை புதியதாக வாங்கிதான் பொங்கல் வைக்கவேண்டும். பாத்திரங்கள் எவர்சில்வர், அலுமினியம், செம்பு, பித்தனை என எந்த உலோகத்தில் செய்ததாகவும் இருக்கலாம். மண் பானையில் பொங்கல் வைக்க எண்ணுபவர்கள், வருடா, வருடம் புதிய மண்பானை வாங்கி பொங்கல் வைக்கலாம்.

பொங்கல் வைப்பது, படையல் போட்டு படைப்பது என அனைத்தும் வீட்டின் வெளியே வாசலில்தான் செய்யவேண்டும். படைப்பு முடிந்தவுடன் வீட்டிற்குள் எடுத்து சென்று சாப்பிடலாம். சாப்பிட்டு முடித்தபின்பு, பொங்கல் வைத்த பாத்திரங்களை, நன்கு கழுவி, சுத்தம் செய்து, தனியாக பாதுகாப்பாக வைத்துக்கொள்ளவேண்டும். இந்தப் பாத்திரங்களை அடுத்த வருடம் வரும் பொங்கல் அன்று முன்னோர் வழிபாடு பொங்கல் வைக்க பயன்படுத்திக்கொள்ளலாம். இந்தப் பாத்திரங்களை வேறு எந்த பண்டிகை, படைப்பு, விசேஷங்களுக்குப் பயன்படுத்தக்கூடாது. பொங்கலுக்கு, பொங்கல் படைக்கும் முன்னோர் வழிபாட் டிற்கு மட்டும்தான் பயன்படுத்த வேண்டும் என்பதில் கவனமாக இருக்கவேண்டும்.

இந்த முன்னோர் பூஜையை வம்சம் இருக்கும்வரை, தை மாதம் 1-ஆம் தேதி, தைப்பொங்கல் நாள் அன்று வருடா வருடம் தொடர்ந்து செய்து வந்தால், குடும்பத்தில் உண்டான பிரச்சினைகள், தடைகள், குழப்பங்கள் படிப்படியாக குறைந்துவருவதை அனுபவத்தில் உணரலாம். இந்த முன்னோர் வழிபாட்டினை முறையாக செய்துவருபவர்கள், வருட திதி, அமாவாசை திதி இவற்றை கொடுக்கவேண்டியது இல்லை. காசி, இராமேஸ்வரம் சென்று அலையவேண்டியது இல்லை. மும்மூர்த்திகளால் செய்ய முடியாததை, தீர்க்கமுடியாத பிரச்சினை, சிரமங்களை உங்கள் முன்னோர்கள் தீர்த்து வைப்பார்கள். மும்மூர்த்திகள் வழிபாடு, பூஜையைவிட நமது வம்ச முன்னோர்கள் வழிபாடு சக்திமிக்கது என்பதை அனுபவத்தில் உணர்ந்து அறிந்து கொள்ளலாம்.

தமிழ் புத்தாண்டு, தமிழ் வருட பிறப்பு தொடங்குவது தை மாதம் 1-ஆம் தேதி தான் என்பதை சித்தர்களின் பாடல்மூலம் அறிந்துகொள்ளலாம். மேலும் சித்தர் பெருமக்கள் கூறிய தமிழ் சோதிட முறையிலும் தை மாதம் 1-ஆம் தேதிதான் தமிழ் வருடப் பிறப்பு என்று கூறப் பட்டுள்ளது. தமிழர்களின் தமிழ் வருட பிறப்பு ஆரம்ப, முதல் நாளில் வீட்டில் பொங்கல் வைத்து முன்னோர்களுக்கு முதல் படையலிட்டு வணங்கி புது வருடத்தை தமிழ் மக்கள் அகத்தியர் கூறிய வழியில் கொண்டாடி செயல்பட்டு வாழ்ந்துள்ளார்கள்.

வீட்டிற்குள் பொங்கல் வைத்து படைப்பது, பழைய பாத்திரங்களில், குக்கரில் பொங்கல் வைத்து, கடவுளை பிரார்த்தனை செய்து வணங்கி படைப்பது, வீட்டிற்குள்ளேயே படைப்பது, பொங்கல் பண்டிகை அல்ல; தமிழர் பண்டிகை அல்ல. இதனால் எந்த நன்மைகளையும் அடைய முடியாது.

இந்த வருடம் வரும் தை மாதம் 1-ஆம் தேதி பொங்கல் நாளன்று அனைவரும் தனது முன்னோர்களை வழிபட்டு, தமிழர்களின் பண்டிகையை கொண்டாடி, முன்னோர்களின் ஆசியையும், அருளையும் பெறுவோமாக, அனைவருக்கும் தமிழ் புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துகள்.

●

## 49வது சென்னை புத்தகத் திருவிழா

ஒய்.எம்.சி.ஏ. மைதானம், நந்தனம். 08.01.26 முதல் 21.01

காலை 11.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை


### வார்த்தைச் சித்தர் **வலம்புரிஜான்** படைப்புகள்







**த**ங்களைத் தாழ்த்தி வீழ்த்தி
சகதியிலிருந்து மீட்டெடுத்து,
தள்ளியிருக்கும் முன்னேற்றத்
திராவிட இயக்கம்தான். நீதிக்
இந்த திராவிட இயக்க அறிவு
சதித்திட்டத்தை எதிர்த்து முன்
கேடுகெட்ட நாற்றமெடுத்த சா
வர்ணித்து அதிலே விழக்கூட
இன்றுவரை இருப்பதுதான் க
இருந்தாலும், நீதிக்கட்சி ஆட்
ஆரியக்கூட்டத்தின் சதி இங்கு
ஆனால், அவ்வப்போது ஆரி
மட்டும் சிக்கிவிடுகிறார்கள். அ
இயக்கத்தின் அறிவுப் புரட்சி
மீண்டும் போராடி திராவிட இ
தொடர்வதும் நீடிக்கிறது.





தொடர்புக்கு... **நக்கீரன்** பப்ளிகேஷன்ஸ்

எண்.105, ஜானி

போன் : 044 2688

-2026

.26 வரை,

# நக்கீரன் குழும ஸ்டால்கள் :
# F-5, 69, 604, 605

ய ஆரியச் சதி எனும்
இன்று ஆரியனை பின்னுக்குத்
த்திற்கு அடித்தளம் அமைத்தது
கட்சி காலத்தில் தொடங்கிய
ப்புரட்சி ஆரியர் கூட்டத்தின்
னேறும். ஆனால், அந்த
திச் சதியை, சந்தனம் என்று
தயாராக ஒருபகுதி தமிழர்கள்
வலையளிக்கிறது.
சி காலத்திலிருந்து இன்றுவரை
வேரூன்ற முடியவில்லை.
யர்களுக்கான அடிமைகள்
அவர்கள் உதவியோடு, திராவிட
யை பின்னுக்கு இழுப்பதும்,
யக்கம் தனது புரட்சியைத்






அய்யா **சின்னகுத்தூசி** படைப்புகள்











ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை-14

3 1800 நூல்களை ஆன்-லைனில் பெற... books.nakkheeran.in




"அகமுடை செல்வனாகும் ஆயுதம் பிடிக்க வல்லான்
சுகமுக வசியனாகும் சுற்றத்தார் தமக்கு நல்லான்
மிகவுயர் கல்வி கற்றும் வேந்தர்க்கும் இனியனாகும்
முகமதும் அழகனாகும் மூலத்தான் தோன்றினானே."

–மரண கண்டிகை

**பொருள்:** மூல நட்சத்திரத்தில் பிறந்தவர், நிறைய தனம் தேடி வைத்துக்கொள்வார். உயர் கல்வியில் தேர்ச்சி பெறுவார்

பாம்பு கடியின் விஷத்தால், இறப்பவர்களைவிட, பயத்தால் இறப்பவர்களே அதிகம். பயத்தை வெளிக் காட்டுவதே, அபாயத்தை எதிர்கொண்டு அழைப்பதாகும். மனிதர்களுக்கு, எதிர்காலத்தைப் பற்றிய அச்சமே வாழ்க்கை முழுவதையும் ஆட்சி செய்கிறது. அஞ்சுவதைத் தவிர மிஞ்சுவது எதுவுமில்லை. எதிர்கால அச்சத்தைப் போக்கும் கலையே ஜோதிடமாகும்.

## 16. மூலம்

**பொதுவான குணம்:**

மூல நட்சத்திரத்தில் பிறந்தவர், பெரியோர்களை மதித்து நடப்பார்கள். பொறுமையின் சிகரமாகத் திகழ்வார். ஆனால், அநியாயம் செய்பவர்களைக் கண்டால் பொங்கி எழுவார். நீதி நியாயத்துக்குக் கட்டுப்

| | |
|---|---|
| ராசி வடிவம்: சிங்கத்தின் வால் | அதிர்ஷ்ட கல்- வைடூரியம் |
| பாலினம் - பெண் | நாடி- பார்சுவ நாடி |
| அதிபதி- கேது | விலங்கு- ஆண் நாய் |
| அதிதேவதை- நிருதி | பட்சி- சேவல் |
| அதிர்ஷ்ட நிறம்- வெண்மை | அதிர்ஷ்ட திசை - தென் மேற்கு |
| மலர்கள்- செம்முல்லை | கணம்- அசுர கணம் |
| விருட்சம் (மரம்) - மா மரம் | பஞ்சபூதம்- வாயு |

கந்தர்வநாடி ஜோதிடர் **லால்குடி கோபாலகிருஷ்ணன்**

# நலம் தரும் நட்சத்திரம்!



பட்டு நடப்பார். அனைத்து வசதி வாய்ப்புகளையும் பெற்று மகிழ்ச்சியாக இருப்பார். எப்போதும் உழைத்துக் கொண்டே இருக்கவேண்டும் என்று விரும்புவார். எப்படிப்பட்ட பிரச்சினைகளையும் எதிர் கொண்டு வெற்றிபெறுவார்.

### விசாக நட்சத்திரம் (ஆண்)

**குணம்:** தன்மானத்துக்கு இழுக்கு ஏற்பட்டால் பொறுத்துக் கொள்ளமாட்டார். ஆன்மிக சம்பிரதாயங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருப்பார். கல்வியறிவும் சிறந்த பேச்சாற்றலும் பெற்றிருப்பார்..

**குடும்பம்:** மூல நட்சத்திரத்தை சேர்ந்தவர், வாழ்க்கைத் துணை யும், குழந்தைகளும் மிகுந்த பாசத்துடன் இருப்பார். பிள்ளை களின் படிப்பு விஷயத்திலும், அவர்களுக்குச் சிறப் பான எதிர்காலம் அமைத்துத் தரவேண்டும் என்பதிலும் மிகுந்த கவனத்துடன் இருப்பார்.

**கல்வி:** இளம் பருவத்திலேயே சுக்கிர தசை வந்துவிடுவதால், கலைத்துறையில் பிரகாசிக்கும் வாய்ப்பு உண்டாகும்.

**தொழில்:** அனைத்து வசதி வாய்ப்புகளையும் பெற்று மகிழ்ச்சியாக இருப்பார். வீடு, வாகனம் போன்ற அனைத்து வசதிகளையும் பெற்று வாழ்வார். பணியிடத்தில் நிர்வாகத்துக்கு விசுவாசமாக நடந்துகொள்வார்.

**திருமணப் பொருத்தம்:** பரணி, பூரம், பூராடம், கார்த்திகை, உத்திரம், உத்திராடம், மிருகசிரீடம், சித்திரை, அவிட்டம், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி, ஆயில்யம், கேட்டை, ரேவதி ஆகியவை நன்றாக பொருந்தும்.

**ஆரோக்கியம்:** பொதுவாக ஆரோக்கியம் நல்ல நிலையிலிருக்கும். ஆனால், சூரிய தசை நடக்கும் காலத்தில், ஜீரண உறுப்பு பாதிப்புகள் உண்டாகும்.

## மூலம் நட்சத்திரம் (பெண்)

**குணம்:** இந்த நட்சத்திரத்தில் பிறந்த பெண்கள், இல்லறம் மற்றும் ஆன்மிகத்திற்குரிய காரியங்களை தவறாமல் ஒழுங்காக செய்வார்கள். ஒழுக்க சீலர்கள். கம்பீரமான தோற்ற மும், தெய்வ பக்தியும் எந்த பிரச்சினை களையும் தைரியத்துடன் எதிர்கொள்ளும் நெஞ்சுரமும் கொண்டவர்கள்.

**குடும்பம்:** இந்த நட்சத்திரப் பெண்களுக்கு திருமண வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும்.

**திருமணப் பொருத்தம்:** அஸ்வினி, ஆயில்யம், மகம், கேட்டை, உத்திராடம், ரேவதி நீங்கலாக, மற்ற நட்சத்திரக்காரர் களைத் திருமணம் செய்து கொள்ளலாம்.

**ஆரோக்கியம்:** நல்ல உடல் ஆரோக்கியம் கொண்டவராக இருப்பார். ஆனாலும் சூரிய தசையில், அதிக உஷ்ணத்தால், நோய்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் அதிகமிருக்கும்

## நட்சத்திரப் பலன்கள்

மூல நட்சத்திரக்காரர்கள், அன்றைய தினத்தின் நட்சத்திரத்தைக் கொண்டு தின பலனறியும் குறிப்பு.

(மூல நட்சத்திரப் பலன்கள் தொடரும்)

செல்: 63819 58636

# ஆன்மாவின் இயக்கமே பிராண...

நசிகேதன் கேட்கிறார். இந்த உடம்பின் தலைவன் யார்...?

யமதர்மன் சொல்கிறார்

பிராணனே மேலே இயக்குவதும், அபாணனை கீழே தள்ளுவதும், உடம்பின் தலைவனாகிய ஜீவன் நடுவில் உள்ளது. எல்லா புலன்களும் அதையே சார்ந்திருக்கின்றன. பிராணன், உடம்பில் பத்து விதமாகச் செயல்படுகிறது அவை:

1) பிராணன் மேல் நோக்கிய இயக்கம்.

2) அபாணன் கீழ் நோக்கிய இயக்கம்.

3) வியாணன் எல்லாப் பக்க இயக்கம்.

4) உதாணன் மரணவேளையில்.. ஜீவன் வெளியேற உதவுதல்.

5) ஸமாணன் ஜீரணம், உணவை இரத்தம் போன்றவையாக மாற்றுதல்.

6) நாகன் வாந்தி, ஏப்பம்.

7) கூர்மன் கண் இமைகளின் இயக்கம்.

8) க்ருகலன் பசி.

9) தேவதத்தன் கொட்டாவி.

10) தனஞ்ஜயன் உடம்பிற்கு ஆரோக்கியம் அளித்தல்.

இவையெல்லாம் சேர்ந்ததே பிராணன். இவற்றை இயக்குவது ஜீவன். இந்தப் பிராணன் வழியே உடம்பையும் மனதையும் கட்டுப்படுத்தி அதனால் சுக- துக்கங்களை பெறுகிறது. அதனால் தான் மனதிற்கும், உடம்பிற்கும் தலைவன் ஜீவன். மனிதன் ஐந்து தொகுதிகளால் சூழப்பட்டவன்.



1) உடம்பு.

2) மனம்.

3) பிராணன்.

4) விஞ்ஞானம்.

5) புத்தி.

இவையெல்லாம் ஆன்மாவின் உறைகள். நாம் உயிர் வாழ கடைசி நான்கும் தேவை.

# வானியல் விஞ்ஞானமும், வேத ஜோதிடமும்...

ஆன்மாவின் ஒரு பகுதி அனுபவங்களைப் பெறுகிறது. அடுத்தது இவற்றுக்கு சாட்சியாக இருப்பது, உடம்பு என்ற கருவியைப் பயன்படுத்திக் கொள்ள முடியாதபொழுது...

உயிர் அதனை (பிராணனை) விட்டு விடுகிறது. இதுதான் மரணம்.

மரணம் உடம்புக்கு மட்டும்தான். அந்த உடம்பை விட்டு உயிரின் யாத்திரை தொடங்குகிறது. இந்த பயணத்திற்கு ஆன்மாவே சாட்சி.

உடம்பில் இருக்கின்ற இந்த உயிர் உடம்பிலிருந்து விடுபட்டு வெளியேறி விட்டால் இங்கே மீதி என்ன இருக்கும்..? அதுவே நீ கேட்ட பொருள் நசிகேதா...!

உடம்பு வீழ்ந்து உயிர் வெளியேறியபிறகு இந்த மாற்றங்களால் பாதிக்கப்படாத ஏதாவது நம்மில் உள்ளதா என்றால்...? உள்ளது.

அதுவே ஆன்மா. அதுவே நீ என்பது தியானத்தின் முக்கியமான பகுதி. இது மரணத்தையே தியானிக்கத் தூண்டுகிறது. எந்த மனிதனும் பிராணனாலோ, அபாணனாலோ வாழ்வதில்லை. அதற்கு எது ஆதாரம் என்பதை நாம் முன்பே பார்த்தோம்.

பிராணனும் அபாணனும் முறையே உள் மூச்சு மற்றும் வெளி மூச்சு இவற்றுக்கு காரணமாகும் மூச்சுவிடுவதால் மட்டும் மனிதன் உயிர் வாழ்வதில்லை. அதற்கும் மேலே ஏதோ இருப்பதால் மூச்சுவிடுவது நடைபெறுகிறது.

அதாவது- மின் சாதனங்கள் மின்சாரத்தை சார்ந்தவை. ஆனால் சாதனங்களை மின்சாரம் சார்ந்திருப்பதல்ல. அதுபோல் உடல் இயக்கம் அனைத்தும் ஆன்மாவை மட்டும் சார்ந்திருக்கின்றன. ஆன்மாவிற்கு எதனையும் சார்ந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.



## ஆன்மாவிற்கு இல்லை மரணம்

**மரணத்திற்கு பின்னால் உயிரின் நிலை என்ன...? நசிகேதன் கேட்கிறார்.**

யமதர்மன் சொல்கிறார்.

நசிகேதா.... மரணத்திற்கு பின்னால் உயிர் என்னவாகும் என்பது பற்றியும் ரகசியமானதும், அழிவற்றதுமான ஆன்மாவைப் பற்றி இப்போது கூறுகிறேன்....

மரணத்திற்கு பிறகு உயிரைக் தாங்கிக்கொண்டிருந்த அந்த மனிதனின் கர்மவினைகளுக்கு ஏற்ப, மனித உடம்போ விலங்கின உடம்போ தாவரங்கள் போன்ற நிலைகளை அடைகின்றனர். பிறவி, மறுபிறவி வினைப் பயனை தொடர்ந்தே அமையும்.

எனவே, நாம் எதைச் செய்கிறோம் என்பதில் மிகுந்த கவனம் தேவை.

எண்ணமே வாழ்வு என்ற கோட்பாட்டின்படி ஆரோக்கியமான எண்ணங்கள் நமக்கு மறுபிறவியில் நல்ல நிலையை தருகின்றன. ஒரு பிறவியின் செயலும் அனுபவமும் அதற்கேற்ப அடுத்த பிறவியாக அமையும்.

புலன்கள் தூங்கும்பொழுது தனக்கு விருப்பமானவற்றை உருவாக்கியபடி எது விதித்திருக்கிறதோ அதுவே தூய மரணமற்ற ஆன்மா என்று சொல்லப்படுகிறது.

அதாவது, ஜீவன் வெளியேறும்பொழுது இறுதியாக அந்த புலன்கள் எதை நினைத்து வெளியேறுகிறதோ அதுவாகவே மாறுகிறது.

இந்த வித்தியாசத்தை நாம் உணர வேண்டுமானால் நாம் எதையாவது நினைத்து உறங்கும் பொழுது கனவில் அதுவாகவே மாறி இருப்போம்.

ஆனால் விழித்துக் கொண்ட உடன்



ஜோதிடவியல் தொடர்!

ஜோதிட ஞான சரஸ்வதி, திருப்பூர் ஆர்.எஸ்.பழனிதுரை

## கீதையில் கண்ணன் கூறுகிறார்...

## நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே மாறுகிறாய் என்று.

## ஆன்மாவிற்கு எதுபோலவும் உருமாறும் சக்தி உள்ளது.

## அது நம் எண்ணத்தில் உள்ளது.

ஸ்தூல உடலுக்கு வந்துவிடுவோம். அதே சமயம் மரணத்திற்கு பின்னர் இந்த உடலுக்கு திரும்ப முடியாததாகையால், அந்த உலகிற்கே சென்றுவிடுவோம்.

எல்லா உலகங்களும் அதனையே சார்ந்திருக்கின்றன. அதனை கடக்க யாராலும் முடியாது.

இது உண்மையா எனில் தூக்கமும், கனவும் இன்னமும் நமக்கு புதிர்களே..! இதனைப் பற்றிய ஆராய்ச்சிகள் முடிய வில்லை. இது தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறது. பலர் மனோதத்துவ வழியில் சென்று ஆராய்ந்தாலும் உண்மை நிலை அகப்படுவதில்லை.

சுருக்கமாகச் சொன்னால் உடம்பும், மன மும் கருவிகள். அவற்றுக்கு ஓய்வு தேவை.

உடம்பு ஓய்வெடுத்தால் அது தூக்கம். மனம் தூங்குவதில்லை. கனவுகள் அப்போது வருகின்றன. அங்கே ஏதுமில்லை. வாகனங் கள் இல்லை, சாலைகள் இல்லை. விலங்கினங் கள் இல்லை, களிப்பு இல்லை, இன்பம் இல்லை, குணம் இல்லை, ஏரி இல்லை, நதிகளும் இல்லை, ஊர்வன, பறப்பன, நீந்துவன, நடப்பன என எதுவும் இல்லை இவைகள் அனைத்தையும் உருவாக்கி தருபவன் அவனே..!

(இதைத்தான் கீதையில் கண்ணன் கூறுகிறார் நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே மாறுகிறாய் என்று. ஆன்மாவிற்கு எதுபோலவும் உருமாறும் சக்தி உள்ளது. அது நம் எண்ணத்தில் உள்ளது. ஆகவேதான் அவர் இறுதியாக தன்னையே நினைத்து சரணடைந்து பிறவிப் பெருங்கடலிலிருந்து விடுபட வழி சொல்கிறார்.

ஆனால் மனிதனோ இறக்கும்போது விடுபட்டு போகும் சொந்த பந்தங்கள் உற்றார்-உறவினர், தொழில், சொத்து இவற்றை நினைத்து மீண்டும் இவற்றுக்குள்ளேயே வந்து பிறக்கின்றான்)

இதன்காரணம் இவ்வாறும் அராயப் படுகிறது. விழிப்புணர்வில் ஆராயப்பட்ட, நடைபெற்ற நிகழ்ச்சிகள், தொடர்ச்சியாகக் கனவிலும் வருகிறது. சிலநேரங்களில் நிறைவேறாத ஆசைகளின் வெளிப்பாடும் இவையே.! சிலவேளைகளில் இவை எதிர்காலத்தைப் பற்றியும் எச்சரிக்கலாம். இது மன உலகம், தனி உலகம்.

நாம் அயர்ந்து உறங்கும்பொழுது, ஒருவர் மட்டும் தூங்குவதில்லை. அவரால்தான் நாம் எல்லாவற்றையுமே உணரமுடிகிறது. அதுவே நீ, அதுவே ஆன்மா..! அது இல்லாவிட்டால் தனியே உறங்கும் ஒருவன் தான் நன்றாக தூங்கினதாக எப்படி உணரமுடியும்..?

அந்த ஆன்மாவால் நாம் மூன்று நிலைகளில் சஞ்சரிக்க வேண்டியிருக்கிறது விழிப்புணர்வு, கனவு, ஆழ்ந்த உறக்கம், அந்த நிலையில் உடம்பின் மாற்றங்களோ, மனதின் செயல்பாடுகளோ, நம்மீது ஆதிக்கம் செலுத்துவதில்லை உடம்பின் மாற்றமாகிய மரணமும் நம்மைப் பாதிக்காத நிலைக்கு நாம் சென்றுவிடுகிறோம்.

அதுவே நீ என்ற தியானப் பகுதி. இதற்கு மூன்று உவமைகள் அது என்ன..?

### ஆன்மாவின் உவமைகள்

***நசிகேதன் அந்த ஆன்மாவைப் பற்றிய மூன்று உவமைகள் என்ன..?***

யமதர்மன்

அக்னி, காற்று, சூரியன், அக்னி.

## அக்னி

ஒன்றுதான் அது. பல்வேறு பொருள்களில் அந்தந்த வடிவத்தில் அமைகின்றன.

அம்மாதிரியே ஆன்மா எந்தெந்த பொருள்களில் உறைகிறதோ அந்தந்த பொருள்களுக்கேற்ப உயிரினங்களுக்கு ஏற்ப அந்தந்த வடிவத்தில் விளங்குகின்றன.

அதேநேரம் அந்த வடிவங்களுக்கு வெளியிலும் அது திகழ்கிறது.

(அத்வைத கொள்கையில் ஒரு பகுதி என்னவெனில் ஒரு கொசுவில் தங்கியிருக்கும் ஆன்மா அதன் அளவிலும் யானையில் தங்கியிருக்கும் ஆன்மா அதன் அளவிலும் இருப்பதாக நம்புவது அவர்களின் கொள்கை.)

ஒரு மரத்துண்டில் அக்னியை நாம் எங்கு பற்ற வைத்தாலும் அது பற்றிகொள்கிறது.

அக்னிக்கு நடுப்பகுதி, நுனிப்பகுதி என்பது பற்றி கவலையில்லை. அக்னி அந்த மரத்துண்டு முழுவதிலும் வியாபித்துள்ளது.

மரத்துண்டு எரியும்போது, அக்னி பாதிக்கப்படுவதில்லை. அதுபோலவே ஆன்மாவும்.

அக்னி போன்றதே ஆன்மா. உடல் மரணமடைந்து எரியும்போது அது பாதிக்கப்படுவதில்லை.

உடல் காலத்தால் பிறப்பு, மூப்பு, பிணி, மரணம் என்று பாதிக்கப்படுவதேயாகும். அதை இயக்கிய ஆன்மாவாகிய நீ எக்காலத்திலும் எதனாலும் பாதிக்கப்படுவதில்லை,

## காற்று

காற்று ஒன்றுதான் அதற்கு இடம், பொருளுக்கேற்ப அந்தந்த சூழ்நிலைக்கேற்ப அதனை நாம் பல்வேறு பெயர்களில் அழைக்கிறோம்.

தென்றல், இதமான காற்று, சூறாவளி, மழையை கலைக்கும் காற்று, புயல், டைபூன், சுனாமி, டார்னடோ, ஊழிக்காற்று இவையெல்லாம் காற்றின் பெயர்கள்தான்.

ஒரு குடும்பத்தின் ஒரு குடும்பத் தலைவன் பல பெயர் வடிவங்களை எடுத்துக் கொள்கிறான் தந்தை, தாய்க்கு மகன், மனைவிக்கு புருஷன், தம்பிக்கு அண்ணன், மாப்பிள்ளைக்கு மாமனார், இப்படி சொல்லிக்கொண்டே போகலாம்.

ஒரு சிறிய குடம் அதனுள் கடல் நீரை நிரப்புகிறோம். தண்ணீர் குடத்தின் உள்ளே இருக்கும்பொழுது அது குடம் நீர். அதை மறுபடியும் கடலில் கொட்டினால் அது பெரிய வடிவம் பெற்ற கடல் நீராகிறது. அதுபோலத்தான் ஆன்மாவும்.

அது எங்கும் நிறைந்தது அதேபோல் ஒவ்வொரு உயிரினமும் அதற்கேற்ப வடிவங்களை பெறுகிறது. கடல் நீரால் குடம் பாதிக்கப்படுவதில்லை. ஆன்மாவும் உடம்புகளால் பாதிக்கப்படுவதில்லை.

ஆன்மா பெருவிரல் அளவில், ஒளி வடிவில் இருப்பதாக அறிகிறோம். ஆனால் அந்த ஒளியின் அளவு குறையாது. ஆன்மாவின் வடிவம் மட்டும் மாறுவதாக உபநிஷதம் கூறுகிறது. ஆன்மா அப்படியேதான் இருக்கிறது. அது மாறுவதில்லை.

## சூரியன்

சூரியன் ஒன்றுதான் அவன் எல்லோராலும் பார்க்கப்படுகிறார். பார்வை கோளாறு சூரியனின் உருவத்தையே- ஒளியையோ மாற்றுவதில்லை.

அதுபோல் ஆன்மா எல்லோருடைய இதயத்திலும் இருந்தாலும் உடம்பில் இருந்தாலும் அதனை தாங்கும் மனிதனின் சுக- துக்கங்களால் பாதிக்கப்படுவதில்லை. அது இவை எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டது.

தாமரைப்பூ, மல்லிகை, முல்லை மலர்வதும். இனிக்கும் பழங்களும். எட்டிக் காயும், பாகலும் பழுப்பு சூரிய வெப்பத்தால் மட்டுமே..! பழங்கள் மலர்களின் குண தோஷங்கள் சூரியனை பாதிப்பதில்லையே..!

மரணத்தால் பாதிக்கப்படாதது ஆன்மா ஒன்றுதான். அந்த ஆன்மாதான் நான் என்று உணர முடியும்பொழுது, அதுதான் பெரிய விஷயம். இதனை உணரத் தவம் வேண்டும். ஆன்மிகச் சாதனைகள் வேண்டும்..!

-தொடர்ந்து பார்ப்போம்!

செல்: 96599 69723

இந்த வார

# ராசி பலன்

**11-1-2026 முதல் 17-1-2026 வரை**





## மேஷம்

**(அஸ்வினி, பரணி, கிருத்திகை 1-ஆம் பாதம்)**

**உ**ங்கள் ராசிக்கு லாப ஸ்தானத்தில் ராகு சஞ்சரிப்பதாலும், 9, 10-ல் சூரியன், செவ்வாய், சுக்கிரன் சஞ்சரிப்பதாலும் பல்வேறு வளமான பலன்களைப் பெறக் கூடிய வாய்ப்புகள் உண்டு. இருக்கும் இடத்தில் உங்களுடைய மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். பிறருக்கு தந்த வாக்குறுதிகளை எளிதில் நிறைவேற்ற முடியும். பெரிய மனிதர்களுடைய ஆதரவு கிடைப்பதால் நீண்டநாட்களாக இருக்கக்கூடிய பிரச்சினைகளுக்கு நல்லதொரு தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் உங்கள் உழைப்புக்கான பலனை அடையக்கூடிய அதிர்ஷ்டமானது இருக்கிறது. குரு வக்ரகதியில் இருப்பதால் பணவரவுகள் சிறப் பாக இருந்து உங்கள் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். கடன் பிரச்சினைகள் குறையும். வேலைக்கு செல்பவர்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வுகள் கிடைக்கக்கூடிய யோகம் இருக்கிறது. வெளியூர் தொடர்புகள்மூலமாக அனுகூலமான பலன்களை அடையக்கூடிய வாய்ப்புகள் உண்டு. மாணவ- மாணவியர்கள் எதிலும் உற்சாகத்தோடு செயல்பட்டு சிறப்பான மதிப்பெண்களை எடுக்க முடியும். உடல்ரீதியாக இருந்த பாதிப்புகள் விலகுவதால் சுறுசுறுப்பாக செயல்பட முடியும். வரும் நாட்களில் ஏற்றமிகுந்த பலன்களைப் பெற ஆஞ்சனேயர் வழிபாடு மேற்கொள்வது, விநாயகருக்கு சூரைத் தேங்காய் உடைப்பதன் மூலமாக கெடுதிகள் விலகி நன்மை கிடைக்கும்.

**வெற்றி தரும் நாட்கள்: 11, 12.**



## ரிஷபம்

**(கிருத்திகை 2, 3, 4-ஆம் பாதங்கள் ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ஆம் பாதங்கள்)**

**உ**ங்கள் ராசிக்கு லாப ஸ்தானத்தில் சனி சஞ்சரிப்பதால் பல்வேறு வளமான பலன்களைப் பெறக் கூடிய வாய்ப்புகள் உங்களுக்கு உண்டு. தற்போது

*8-ல் சஞ்சரிக்கக்கூடிய சூரியன், செவ்வாய் வரும் 14-ஆம் தேதிமுதல் 9-ல் சூரியனும், 16-ஆம் தேதிமுதல் 9-ல் செவ்வாயும் சஞ்சரிக்க இருப்பதால் உங்களுக்கு தற்போது இருக்கக்கூடிய பிரச்சினைகள் எல்லாம்கூட இனிவரும் நாட்களில் படிப்படியாக விலகி நல்ல முன்னேற்றங்கள் உண்டாகும். உடல் ரீதியாக இருக்கக்கூடிய பாதிப்புகள் விலகி எதிலும் சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள தேக்கங்கள் விலகி நல்ல முன்னேற்றம் உண்டாகும். நீங்கள் எதிர்பார்த்த வாய்ப்புகள் கிடைக்கும். வெளியூர் தொடர்புகள்மூலம் அனுகூலங்களை அடையக்கூடிய வாய்ப்புகள் உண்டு. வேலையாட்கள் ஒத்துழைப்பு மிகவும் சிறப்பாக இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பணியில் திறம்பட செயல்பட்டு நல்ல பெயர் எடுக்கமுடியும். மாணவ- மாணவியர்களுக்கு கல்வியில் இருந்த மந்த நிலை விலகி எதிலும் சுறுசுறுப்பாக செயல்பட்டு தேர்வுகளில் நல்ல மதிப்பெண்களை எடுக்கக்கூடிய நேரமாகும். தடைப்பட்டு வந்த சுப காரியங்கள் தற்போது கைகூடி மன மகிழ்ச்சி ஏற்படும். வரும் நாட்களில் அனுகூலப் பலன்களைப்பெற லட்சுமி நரசிம்மர் வழிபாடு மேற்கொள்வது, சிவன் ஸ்தலங்களுக்கு சென்றுவருவதன் மூலம் நல்லது நடக்கும்.*

**வெற்றி தரும் நாட்கள்: 11, 12, 13, 14, 15 .**



## மிதுனம்

**(மிருகசீரிடம் 3, 4-ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3-ஆம் பாதங்கள்)**

*உங்கள் ராசிக்கு 7, 8 ஆகிய ஸ்தானங்களில் சூரியன், செவ்வாய் சஞ்சரிப்பதால் நெருங்கியவர்களை அனுசரித்துச் செல்லவேண்டிய நேரமாகும். உடனிருப்பவர்களிடம் தேவையற்ற மன ஸ்தாபங்கள் உண்டாகும். பணவரவில் ஏற்ற- இலக்கமான நிலை இருக்கும் என்பதால் ஆடம்பர செலவுகளை குறைத்துக்கொண்டு சிக்கனத்தோடு இருக்க வேண்டும். உடல்ரீதியாக பாதிப்புகள் ஏற்படலாம் என்பதால் உணவு விஷயத்தில் சற்று கட்டுப்பாடோடு இருப்பது நல்லது. தேவையற்ற தூரப் பயணங்களைத் தள்ளி வைக்க வேண்டிய நேரமாகும். தொழில், வியாபாரத்தில் நீங்கள் நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருக்கும். வேலையாட்களால் வீண் பிரச்சினைகள் உண்டாகலாம். மறைமுக எதிர்ப்புகள் காரணமாக உங்களுக்கு கிடைக்க வேண்டிய நல்ல வாய்ப்புகள்கூட தடைப்படக்கூடிய நேரமாகும். வேலைக்கு செல்பவர்களுக்கு நீங்கள் சிறப்பாக செயல்பட்டாலும் மேலதிகாரியிடம் தேவையற்ற மன ஸ்தாபங்கள் ஏற்படக்கூடிய நேரமென்பதால் சூழலுக்கு ஏற்றவாறு எதிலும் பொறுமையோடு செயல்பட வேண்டிய காலமாகும். மாணவ- மாணவியர்கள் ஞாபக மறதிகள் ஏற்படக்கூடிய காலம் என்பதால் எதிலும் கண்ணும் கருத்துமாக இருப்பது, தேவையற்ற பேச்சுகளை தவிர்ப்பது நல்லது. வரும் நாட்களில் வளமான பலன்களைப்பெற முருக வழிபாடு மேற்கொள்வது, உடல் ஊனமுற்றவர்களுக்கு உங்களால் முடிந்த உதவிகளைச் செய்வது நல்லது.*

**வெற்றி தரும் நாட்கள்: 14, 15, 16, 17.**




முனைவர் **முருகுபாலமுருகன்**

எண்: 19/33, வடபழனி ஆண்டவர் கோவில் தெரு, வடபழனி, சென்னை 600 026. தமிழ்நாடு, இந்தியா. தொலைபேசி: 044 24881038, அலைபேசி: 0091 72001 63001, 93837 63001.



## கடகம்

**(புனர்பூசம் 4-ஆம் பாதம், பூசம், ஆயில்யம்)**

உங்கள் ராசிக்கு 9-ல் சனி, வார முற்பாதியில் 6-ல் சூரியன், செவ்வாய் சஞ்சரிப்பதால் எதிர்நீச்சல் போட்டாவது அடைய வேண்டிய இலக்கை அடைவீர்கள். குருபகவான் வக்ரகதியில் இருப்பதால் எதிர்பாராத தனச் சேர்க்கை ஏற்பட்டு உங்களது தேவைகள் பூர்த்தியாகக்கூடிய நேரமாகும். 14-ஆம் தேதி முதல் சூரியன் 7-லும், 16-ஆம் தேதி முதல் செவ்வாய் 7-லும் சஞ்சரிப்பதால் கணவன்- மனைவியிடையே விட்டுக்கொடுத்து செல்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் ஒவ்வொரு விஷயத்திலும் சற்று கவனத்தோடு செயல்பட்டால் போட்ட முதலை எளிதில் எடுக்கக்கூடிய வாய்ப்புகள் உண்டு. தேவையற்ற தூரப் பயணங்களைத் தற்போதைக்கு தள்ளிவைப்பது உத்தமம். வேலையாட்கள் ஒத்துழைப்பு சிறப்பாக இருப்பதால் கடினமான காரியங்களைகூட சிறப்பாக செய்து முடிக்கமுடியும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பணியில் சுறுசுறுப்பாக செயல்படக்கூடிய பலம் உண்டாகும். உங்கள்மீது இருந்த பழிச்சொற்கள் எல்லாம் தற்போது குறைவதால் மன நிம்மதி ஏற்படக்கூடிய வாய்ப்புகள் உண்டு. மாணவ- மாணவியர்கள் எதிலும் உற்சாகத்தோடு செயல்பட்டு பெற்றோர் மற்றும் ஆசிரியரிடம் நல்ல பெயர் எடுக்கக்கூடிய நேரமாகும். பொதுவாக உங்கள் முன்கோபத்தை குறைத்துக்கொள்வது நல்லது. வரும் நாட்களில் ஏற்றமிகுந்த பலன்களைப்பெற துர்க்கையம்மனை வழிபடுவது, தட்சிணாமூர்த்தி வழிபாடு மேற்கொள்வது மிகவும் நல்லது.

| | | | |
|---|---|---|---|
| சனி | | | குரு (வ) |
| ராகு | திருக்கணித கிரக நிலை | | |
| | | | கேது |
| சூரியன் சுக்கிரன் செவ்வாய் புதன் | | சந்திரன் | |

**வெற்றி தரும் நாட்கள்: 16, 17.**



## சிம்மம்

**(மகம், பூரம், உத்திரம் 1-ஆம் பாதம்)**

உங்கள் ராசியாதிபதி சூரியன் வரும் புதன்கிழமைமுதல் 6-ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் பல்வேறு வளமான பலன்களை நீங்கள் அடையக்கூடிய வாய்ப்புகள் உண்டு. புதன் உங்கள் ராசிக்கு 5-ல் சஞ்சரிப்பதால் நல்ல வாய்ப்புகள் உங்களுக்கு கிடைக்கும். உங்கள் ராசிக்கு 7-ல் ராகு, 8-ல் சனி சஞ்சரிப்பதால் உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. கணவன்- மனைவியிடையே விட்டுக்கொடுத்து செல்வது உத்தமம். பண விஷயத்தில் சற்று சிக்கனத்தோடு இருக்கவேண்டும். சக்திக்கு மீறிய செலவுகள் ஏற்படக்கூடிய நேரம் என்பதால் ஆடம்பரத்தை குறைத்துக்கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் கவனமாக இருந்தால் மட்டுமே போட்ட முதலை எடுக்கக்கூடிய வாய்ப்புகள் உண்டு. கூட்டாளிகளை அனுசரித்துச் செல்வதன்மூலமாக ஒருசில ஆதாயத்தை அடையமுடியும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பணிச்சுமை காரணமாக ஓய்வு நேரம் குறையக்கூடிய காலமாகும். மாணவ- மாணவியர்களுக்கு நீங்கள் சிறப்பாக செயல்பட்டாலும் உடன் பழகக்கூடிய மாணவ- மாணவிகளால் தேவையில்லாத பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும். உணவு விஷயத்தில் சற்று கட்டுப்பாடோடு இருப்பது, தேவையற்ற பயணங்களைத் தள்ளிவைப்பது நல்லது. வரும் நாட்களில் அனுகூலப் பலன்களைப் பெறுவதற்கு துர்க்கையம்மனுக்கு ராகு காலத்தில் தீபம் ஏற்றுவது, வெங்கடேசப் பெருமாளை தரிசிப்பதன் மூலம் நன்மை கிடைக்கும்.

**வெற்றி தரும் நாட்கள்: 11, 12, 13.**



## கன்னி

**(உத்திரம் 2, 3, 4-ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1, 2-ஆம் பாதங்கள்)**

ராசியாதிபதி புதன் 4-ல் சஞ்சரிப்பதாலும், 6-ல் ராகு சஞ்சரிப்பதாலும் இக்கட்டான நேரத்தில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். குரு வக்ரகதியில் இருப்பதால் பணவரவுகள் சாதகமாக இருந்து உங்கள் தேவைகள் பூர்த்தியாகும். வரும் புதன்கிழமை முதல் சூரியன் 5-ஆம் வீட்டில் சஞ்சரிக்க இருப்பதால் உங்களுக்கு இருக்கக்கூடிய அலைச்சல், டென்ஷன் சற்று குறைந்து ஏற்ற மிகுந்த பலன்களைப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி இருக்கும். போட்ட முதலை எடுக்கக்கூடிய வாய்ப்புகள் உங்களுக்கு உண்டு. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பணிச்சுமை இருந்தாலும் எதிலும் தனித்திறமையோடு செயல்பட்டு எடுத்த

பணியை முடிப்பீர்கள். நீங்கள் உடனிருப்பவர்களை சற்று அனுசரித்துச் செல்வது, சில இடங்களில் நெருங்கியவர்களிடம் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. மாணவ- மாணவியர்கள் பொழுதுபோக்கு விஷயங்களில் நேரத்தை செலவிடுவதை விட பயனுள்ள விஷயத்திற்கு நேரத்தை செலவிடுவது நல்லது. குடும்பத்தில் நீண்டநாட்களாக தடைபட்டுவந்த சுபகாரியங்கள் தற்போது கைகூடி மனமகிழ்ச்சி ஏற்படும். வண்டி, வாகனங்கள் மூலமாக சுபச் செலவுகள் ஏற்படக்கூடிய நேரமாகும். வரும் நாட்களில் ஏற்றமிகுந்த பலன்களை நீங்கள் பெறுவதற்கு கால பைரவரை வழிபாடு செய்வது, விநாயகர் வழிபாடு மேற்கொள்வதன் மூலம் அனுகூலமான பலன்களை அடையமுடியும்.

**வெற்றி தரும் நாட்கள்: 14, 15.**



## துலாம்

**(சித்திரை 3, 4-ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3-ஆம் பாதங்கள்)**

உங்கள் ராசிக்கு 6-ல் சனி, 11-ல் கேது சஞ்சரிப்பதும், செவ்வாய்க்கிழமைமுதல் 4-ல் சுக்கிரன் சஞ்சரிக்க இருப்பதும் நல்ல அமைப்பு என்பதால் வளமான பலன்களைப் பெறுவீர்கள். இருக்கக் கூடிய இடத்தில் உங்களுடைய மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். நண்பர்கள்மூலமாக ஒருசில வளமான பலன்களைப் பெறுவீர்கள். புதன்கிழமை முதல் சூரியன் 4-லும், வெள்ளிக்கிழமைமுதல் செவ்வாய் 4-லும் சஞ்சரிக்க இருப்பதால் அலைச்சல் காரணமாக இருப்பதை அனுபவிக்க இடையூறுகள் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பு சிறப்பாக இல்லாவிட்டாலும் நீங்கள் எதையும் சாமர்த்தியமாக கையாண்டு எடுத்த காரியத்தை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். வாடிக்கையாளர்களுடைய தேவையை எளிதில் பூர்த்தி செய்யமுடியும். வேலைக்கு செல்பவர்களுக்கு நீங்கள் எதிர்பார்த்த பதவி உயர்வு களை அடையக்கூடிய நேரமாகும். சக ஊழியர்களுடைய ஒத்துழைப்பு சிறப்பாக இருக்காது என்பதால் எந்த ஒரு விஷயத்திலும் நீங்கள் நேரடியாக செயல்பட்டால்தான் ஒருசில வளமான பலன்களைப் பெறமுடியும். மாணவ- மாணவியர்களுக்கு படிப்பில் கவனம் செலுத்த முடியாத அளவுக்கு தேவையில்லாத இடையூறுகள் ஏற்படும். வரும் நாட்களில் அனுகூலப் பலன்களை பெறுவதற்கு வெங்கடேசப் பெருமாளைத் தரிசிப்பது, ராகுகால நேரங்களில் துர்க்கையம்மனை வழிபாடு செய்வது மிகவும் நல்லது.

**வெற்றி தரும் நாட்கள்: 11, 12, 13, 16, 17.**

## இவ்வார சுப முகூர்த்த நாட்கள்:

**14-1-2026 மார்கழி, 30-ஆம் தேதி, புதன்கிழமை,** *ஏகாதசி திதி, அனுஷ நட்சத்திரம், சித்தயோகம், காலை 9.00 மணிமுதல் 10.00 மணிக்குள் கும்ப லக்னம், தேய்பிறை.*



## விருச்சிகம்

**(விசாகம் 4-ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

உங்கள் ராசிக்கு 2-ல் புதன் சஞ்சரிப்பதாலும், வரும் புதன்கிழமைமுதல் சூரியன் 3-லும், வெள்ளிக்கிழமைமுதல் செவ்வாய் 3-லும் சஞ்சரிக்க இருப்பதால் நீங்கள் எதிலும் நிதானத் தோடு செயல்பட்டால் ஒருசில வளமான பலன்களைப் பெறலாம். தொழில் வியாபாரத்தில் முதலில் கிடைக்கக்கூடிய வாய்ப்புகளை சரியான முறையில் பயன்படுத்திக்கொண்டால் விரைவில் ஒரு நல்ல முன்னேற்றத்தை அடையக்கூடிய வாய்ப்புகள் இருக்கும். வார முற்பாதியில் ஒருசில நெருக்கடிகள் இருந்தாலும் வார இறுதி நாட்களில் எதிர்பாராத பொருளாதார வரவுகளை பெற்று வளமான பலன்களைப் பெறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பல்வேறு நெருக்கடிகள் இருந்தாலும் நீங்கள் தனித்திற மையோடு செயல்பட்டு எடுத்த பணியை முடிப்பீர்கள். தேவையற்ற பயணங்களைத் தள்ளி வைப்பது மிகவும் நல்லது. பணம் கொடுக்கல்- வாங்கல் விஷயத்தில் சற்று நிதானத்தோடு செயல்படவேண்டும். பிறருக்கு வாக்குறுதி கொடுப்பதைத் தற்காலிகமாக தவிர்ப்பது மிகவும் நல்லது. மாணவ- மாணவியர்கள் ஒவ்வொரு விஷயத்திலும் சிந்தித்து செயல்பட்டால்தான் பெற்றோர் மற்றும் ஆசிரியரிடம் நல்ல பெயர் எடுக்கமுடியும். வரும் நாட்களில் வளமான பலன்களை நீங்கள் பெறுவதற்கு காலபைரவரை வழிபாடு செய்வது, மகாலட்சுமி வழிபாடு மேற்கொள்வதன்மூலம் அனுகூலமான பலன்களை அடைய முடியும்.

**வெற்றி தரும் நாட்கள்: 14, 15.**



## தனுசு

**(மூலம், பூராடம், உத்திராடம் 1-ஆம் பாதம்)**

**உ**ங்கள் ராசிக்கு 1, 2-ல் சூரியன், செவ்வாய், 4-ல் சனி சஞ்சரிப்பதால் நீங்கள் எதிலும் நிதானத்தோடு செயல்பட வேண்டும். உங்களது முன்கோபத்தை சற்று குறைத்துக் கொள்வது நல்லது. தற்போது குருபகவான் வக்ரகதியில் சஞ்சரிப்பதால் பண விஷயத்தில் சற்று சிக்கனத்தோடு இருக்கவேண்டும். நம்பியவர்களே உங்களுக்கு தேவையில்லாத நெருக்கடிகளை ஏற்படுத்துவார்கள். தேவை யில்லாத பயணங்களைத் தள்ளிவைப்பது மிகமிக நல்லது. தொழில், வியாபாரத்தில் சூழ்நிலையை புரிந்து நடந்துகொண்டால் ஒருசில அனுகூலத்தை அடையமுடியும். வேலையாட்களை அனுசரித்துச் செல்வது நல்லது. தொழில் தொடர்பான கணக்கு வழக்குகளை சரியான முறையில் பராமரிப்பது சிறப்பு. வேலைக்கு செல்பவர்களுக்கு பிறருடைய வேலையும் சேர்த்து செய்ய வேண்டிய ஒரு நெருக்கடியான நிலை உண்டாகும். அதிகாரியிடம் பேசுகின்ற பொழுது சற்று பொறுமையோடு நடந்து கொண்டால் ஒருசில ஆதாயத்தை அடைய முடியும். மாணவ- மாணவியர்கள் நீங்கள் சிறப்பாக செயல்பட்டாலும் சக மாணவ- மாணவிகளால் வீண் பிரச்சினைகளை எதிர் கொள்ள நேரிடும். உடல் ஆரோக்கியத்தில் அக்கறை எடுத்துக்கொள்வது, உணவு விஷயத்தில் கட்டுப்பாடோடு இருப்பது நல்லது. வரும் நாட்களில் அனுகூலப் பலன்கள் அடைவதற்கு தட்சிணாமூர்த்தி வழிபாடு மேற்கொள்வது, சிவன் ஸ்தலங் களுக்கு சென்றுவருவது மிகவும் நல்லது.

**வெற்றி தரும் நாட்கள்: 11, 12, 13, 16, 17 .**

## மகரம்

**(உத்திராடம் 2, 3, 4-ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2-ஆம் பாதங்கள்)**



**உ**ங்கள் ராசிக்கு 3-ல் சனி சஞ்சரிப் பதாலும், வரும் செவ்வாய்க்கிழமைமுதல் ஜென்ம ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்க இருப்பதாலும் நல்ல வாய்ப்புகள் உங்களுக்கு கிடைக்கும். எதிலும் துணிச்சலோடு செயல்படுவீர்கள். குருபகவான் வக்ரகதியில் இருப்பதால் எதிர்பாராத உதவிகள் கிடைத்து உங்கள் தேவைகள் பூர்த்தியாகும். உங்கள் ராசிக்கு 2-ல் ராகு சஞ்சரிப்பதால் பேச்சில் பொறுமையோடு இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் உங்கள் உழைப்புக்கான பலனை அடையக்கூடிய நேரமாகும். தொழில் அபிவிருத்திக்காக நீங்கள் மேற்கொள்ளக்கூடிய முயற்சிகள் வெற்றியைத் தரும். வேலையாட்கள் ஒத்துழைப்பு மிகமிக சிறப்பாக இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மற்றவர்களால் முடிக்க முடியாத ஒரு காரியத்தைகூட நீங்கள் சிறப்பாக கையாண்டு குறித்த நேரத்தில் முடித்து நல்லபெயர் எடுக்கக்கூடிய காலமாகும். கணவன்- மனைவியிடையே ஒருவருக்கொருவர் கௌரவம் பார்க்காமல் விட்டுக்கொடுத்து செல்வது நல்லது. மாணவ- மாணவியர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு எதையும் எளிதில் புரிந்துகொண்டு நல்ல மதிப்பெண்கள் எடுக்கமுடியும். தேவையற்ற பயணங்களை தற்காலிகமாக தள்ளிவைப்பது நல்லது. வரும் நாட்களில் ஏற்ற மிகுந்த பலன்களைப் பெறுவதற்கு சிவன் ஸ்தலங்களுக்கு சென்று வருவது, சரபேஸ்வரர் வழிபாடு மேற்கொள்வது உத்தமம்.

**வெற்றி தரும் நாட்கள்: 11, 12, 13, 14, 15 .**



## கும்பம்

**(அவிட்டம் 3, 4-ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3-ஆம் பாதங்கள்)**

**ஜெ**ன்ம ராசியில் ராகு, 2-ல் சனி சஞ்சரிப்பதால் எதிலும் உணர்ச்சிவசப்படாமல் பொறுமையோடு செயல்பட வேண்டும். வார முற்பாதியில் சூரியன், செவ்வாய், புதன் லாப ஸ்தானத் தில் சஞ்சரிப்பதால் ஒருசில எதிர்பாராத அனுகூலங்களை அடையக்கூடிய வாய்ப்புகள் உங்களுக்கு உண்டு. கொடுக்கல்- வாங்கல் விஷயத்தில் மிகவும் கவனத்

தோடு இருக்கவேண்டும். பேச்சில் சற்று பொறுமையோடு இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் தேவையற்ற நெருக்கடிகள் ஏற்படக்கூடிய நேரம் என்பதால் சூழலுக்கு ஏற்றவாறு எதிலும் பொறுமையோடு நடந்துகொள்வது உத்தமம். தொழில் தொடர்பான முக்கிய விஷயங்களை பொதுவெளியில் பேசாமல் இருப்பது நல்லது. பிள்ளைகள் வழியில் தேவையில்லாத நெருக்கடிகள் ஏற்படும். உற்றார்- உறவினர்களிடம் பேசுகின்ற பொழுது சற்று பொறுமையோடு இருப்பது மிகவும் நல்லது. வேலைக்கு செல்பவர்கள் வீண் பேச்சை குறைத்து விட்டு உங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணியில் மட்டும் சற்று கவனத்தோடு இருப்பது நல்லது. மாணவ- மாணவியர்கள் பொறுமையாக செயல்பட்டால் வளமான பலன்களைப் பெறக்கூடிய வாய்ப்புகள் உங்களுக்கு உண்டு. வரும் நாட்களில் அனுகூலப் பலன்களைப் பெறுவதற்கு ஆஞ்சனேயர் வழிபாடு மேற்கொள்வது, தட்சிணாமூர்த்திக்கு வியாழக்கிழமைகளில் அர்ச்சனை செய்வதன் மூலம் ஏற்றங்களை அடைய முடியும்.

**வெற்றி தரும் நாட்கள்: 14, 15, 16, 17.**

**கிரக பாத சாரம்:**

சூரியன்: பூராடம்- 4.
சந்திரன்: சித்திரை- 3.
செவ்வாய்: பூராடம்- 4.
புதன்: பூராடம்- 3.
குரு: புனர்பூசம்- 2 (வ).
சுக்கிரன்: உத்திராடம்- 1.
சனி: பூரட்டாதி- 4.
ராகு: சதயம்- 4.
கேது: பூரம்- 2.

**கிரக மாற்றம்:**

13-1-2026 மகரத்தில் சுக்கிரன் அதிகாலை 3.58 மணிக்கு
14-1-2026 மகரத்தில் சூரியன் பகல் 3.07 மணிக்கு
16-1-2026 மகரத்தில் செவ்வாய் அதிகாலை 4.28 மணிக்கு
17-1-2026 மகரத்தில் புதன் பகல் 10.24 மணிக்கு

**சந்திரன் மாறுதல்**

ஆரம்பம்: துலாம்
13-1-2026 மாலை 5.21 மணிக்கு- விருச்சிகம்.
16-1-2026 அதிகாலை 5.48 மணிக்கு- தனுசு.

## மீனம்

**(பூரட்டாதி 4-ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி)**



**உ**ங்கள் ராசிக்கு 6-ல் கேது, 10, 11-ல் சூரியன், செவ்வாய், சுக்கிரன் சஞ்சரிப்பதால் பல்வேறு வளமான பலன்களைப் பெறக்கூடிய வாய்ப்புகள் வரும் நாட்களில் உண்டு. இருக்கக்கூடிய இடத்தில் உங்களுடைய மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். வெளியூர் தொடர்புகள் மூலமாக அனுகூலமான பலன்களை அடையக்கூடிய அமைப்பானது உங்களுக்கு இருக்கிறது. தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சியை அடைய முடியும். வேலையாட்கள் ஒத்துழைப்பு சிறப்பாக இல்லாவிட்டாலும் உங்கள் தனித்திறமையால் எதிலும் சிறப்பாக செயல்படுவீர்கள். கொடுக்கல்- வாங்கல் விஷயத்தில் சற்று பொறுமையோடு இருந்தால் வீண் பிரச்சினைகளைத் தவிர்க்க முடியும். வேலைக்கு செல்பவர்களுக்கு எதிர்பார்த்த இடமாற்றங்கள் கிடைக்கக்கூடிய யோகமானது உங்களுக்கு இருக்கிறது. வெளியூர் தொடர்புகள் மூலமாக அனுகூலமான பலன்களைப் பெறுவீர்கள். கடந்த காலங்களில் உங்களுக்கு இருந்துவந்த உடல் உபாதைகள் தற்போது குறைந்து எதிலும் சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். மாணவ- மாணவியர்கள் எதையும் எளிதில் புரிந்து கொண்டு சிறப்பான மதிப்பெண்களை எடுக்க முடியும். பெரிய மனிதர்களுடைய உதவியானது கிடைப்பதால் நீண்டநாட்களாக இருக்கக்கூடிய பிரச்சினைகளுக்கு தற்போது ஒரு நல்ல தீர்வு கிடைக்கும். வரும் நாட்களில் ஏற்றமிகுந்த பலன்களைப்பெற சரபேஸ்வரர் வழிபாடு மேற்கொள்வது, உடல் ஊனமுற்றவர்களுக்கு உங்களால் முடிந்த உதவிகளைச் செய்வது நன்மை தரும்.

**வெற்றி தரும் நாட்கள்: 16, 17.**

ஜோதிடத்தில் 12 ராசி கட்டங்களையும் பலவாறாக பிரித்து கூறப்பட்டுள்ளது. அது திரிகோணம், கேந்திரம், உபஜய ஸ்தானம். துர்ஸ்தானம் என அறியப்படுகிறது.

திரிகோணம்- 1, 5, 9.

கேந்திரம்- 1, 4, 7, 10.

உபஜய ஸ்தானம்- 3, 6, 10.

துர் ஸ்தானம்- 6, 8, 12 எனப்படும்.

இதில் உபஜய ஸ்தானம், ஒரு மனிதனின் முழு முயற்சியில், உழைத்து வெற்றி ஏற்படச் செய்யும்.

இதில் 3-ஆம் பாவம் மிக முக்கியமானது. இந்த 3-ஆம் பாவத்தின் விசேஷம் என்ன?

லக்னத்திற்கு- வெற்றி ஸ்தானம். 2-ஆமிடத்திற்கு 2-ஆம் ஸ்தானம் உபரி வருமான ஸ்தானம்.

4-ஆமிடத்திற்கு விரயஸ்தானம்- வீடு, வாகன முதலீட்டிற்கு உரிய இடம். 5-ஆமிடத்திற்கு 11-ஆம் ஸ்தானம். இதுதான் உங்கள் வாரிசு, அறிவு, பூர்வீகம்மூலம் வரும் லாபத்தைக் கூறும்.

6-ஆமிடத்திற்கு 10-ஆமிடம் உங்கள் மாத சம்பள வேலையின் வெற்றி மற்றும் அதே வேலை. பிற் காலத்தில் சொந்தத் தொழிலாக மாறும் முன்னேற்றம் என இவ்விஷயங்களை எடுத்துரைக்கும்.

7-ஆமிடத்திற்கு 9-ஆமிடம்: வாழ்க்கைத் துணையின்மூலம் வரும் அதிர்ஷ்டம் தோள் கொடுத்து உதவும் தன்மை இவை பற்றிக் கூறும்.

8-ஆமிடத்திற்கு 8-ஆமிடம்: ஆயுள் பாவத்திற்கு, ஆயுள் பாவம். இதுவும் ஆயுள் விருத்தியைக் கூறும். (2, 7-ஆமிடங்கள் மாரக ஸ்தானம் என்று அறிக.)

9-ஆமிடத்திற்கு 7-ஆமிடம்: அதிர்ஷ்டத்தை வரவழைப்பதில், உங்கள் வாழ்க்கைத்துணை, பங்குதாரர் மற்றும் உங்கள் வெளிவட்டார பழக்கம் பற்றி கூறும்.

10-ஆமிடத்திற்கு 6-ஆமிடம்: உங்கள் சொந்தத் தொழில், உங்களின் உழைப்பு மற்றும் முயற்சி பற்றிக் கூறும்.

11-ஆமிடத்திற்கு 5-ஆமிடம்: நீங்கள் எண்ணியது நடக்க, நினைத்தது நடக்க, உங்கள் அறிவின் அளவை எடுத்துரைக்கும்.

12-ஆமிடத்திற்கு 4-ஆமிடம்: 12-ஆமிடம் விரய ஸ்தானம். 4-ஆமிடம் சுக ஸ்தானம். எனவே உங்களின் சௌகர்யத்தை எவ்வழியில் அனுபவிப்பீர்கள் என்பதை அளந்து கூறும்.

3-ஆமிடச் செயல்கள்: சிறு தூரப் பயணம், பணியாள், தரகர்கள், பயிற்சிகள், வீரம், உறுதி, ஆண்மை, வதந்தி, தகவல் தொடர்பு, ஒப்பந்தம், கைபேசி என பல காரகமுண்டு.

### 3-ஆமிடமும் காலபுருச தத்துவமும்

காலபுருச தத்துவப்படி, 3-ஆமிட அதிபர் புதன் ஆவார். இவர் தன்னுடைய இன்னொரு வீட்டில், கன்னியில் உச்சமடைவார். மேலும் ஒரு மாதத்துக்கு ஒரு ராசி மாறிவிடுவார். சூரியனைவிட்டு விலக மாட்டார். எப்போதும் சூரியன் கூடவே இருப்பதால் இவருக்கு அஸ்தமன தோஷம் இல்லை என்றும் கூறுவர். மறைந்த புதன் நிறைந்த பலன் என்பர். ஏனெனில் இவர் காலபுருசனின் 6-ஆமிடத்தில் உச்சம் அடைவதால், இவ்விதம் கூறப்படுகிறது.

தற்காலத்தில், மனிதர்களில் அனேகர், ஏன் அனை வரும்கூட என்றும் சொல்லலாம். கைபேசி இல்லாத ஆட்களே கிடையாது. பெரும்பாலும், கைபேசிமூலம் தொழில் நடத்தவும் செய்கிறார்கள்.

ஆனால் 3-ஆமிடத்திற்கு கைபேசி தவிரவும். பல பணிகள் உள்ளது. 12 லக்னத்தாருக்கும் 3-ஆமிடம் என்னவிதமான உபரி வருமானம் அல்லது நேரிடையான வருமான வழங்கும்.

# 3-ஆம் அதிபதி தரும் உபரி வருமானம்!

### மேஷ லக்னம்

உங்களின் 3-ஆமிடம் மிதுனம் அதிபர் புதன். இவர் உங்கள் 3-ஆமிடத்தில் ஆட்சியும், 6-ஆமிடத்தில் உச்சமும், 12-ஆமிடத்தில் நீசமும் அடைவார்.

இந்த 3-ஆமிட புதன், உங்கள் லக்னாதிபதி செவ்வாய்கூட சேர்ந்தால், உப தொழில், உபரி வருமானம் கிடைக்காது.

புதன், சுக்கிரன் சேர்க்கை, உங்கள் வாழ்க்கைத்துணையின் வீட்டிலிருந்து

## சந்திராஷ்டம தினங்கள்

**மீனம்** : *11-1-2026 அதிகாலை 4.52 மணிமுதல் 13-1-2026 மாலை 5.21 மணிவரை சந்திராஷ்டமம். கணவன்- மனைவியிடையே தேவையில்லாத கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடிய நேரமென்பதால் பொறுமையோடு செயல்படுவது நல்லது. எளிதில் முடியவேண்டிய காரியங்கள் சிலர் செய்யக்கூடிய செயல்களால் தடைப்படும். முடிந்தவரை பிறர் விஷயத்தில் தேவையில்லாமல் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது. மகாலட்சுமி வழிபாடு வளர்ச்சியை ஏற்படுத்தும்.*

**மேஷம்:** *13-1-2026 மாலை 5.21 மணிமுதல் 16-1-2026 அதிகாலை 5.48 மணிவரை சந்திராஷ்டமம். வீண் அலைச்சல் காரணமாக இருப்பதை அனுபவிக்க இடையூறுகள் ஏற்படும். இரவு நேரங்களில் பயணங்கள் மேற்கொள்வதைத் தவிர்க்கவும். பங்காளியிடம் தேவையற்ற கருத்து வேறுபாடுகள் உண்டாகும். குடும்ப விஷயங்களை வெளிநபர்களிடம் பேசாமல் இருப்பது நல்லது. வண்டி, வாகனங்கள்மூலமாக வீண் விரயங்கள் உண்டாகும். பைரவர் வழிபாடு நன்மை தரும்.*

**ரிஷபம்:** *16-1-2026 அதிகாலை 5.48 மணிமுதல் 18-1-2026 மாலை 4.41 மணிவரை சந்திராஷ்டமம். உங்களின் பொருளாதாரநிலை சிறப்பாக இருந்தாலும் வயிறு சம்பந்தப் பட்ட பாதிப்புகளால் மன அமைதி குறையும். உணவு விஷயத்தில் கட்டுப்பாடோடு இருப்பது நல்லது. பூர்வீக சொத்து வழியில் வீண் பிரச்சினைகள் உண்டாகும். அதிக முதலீடுகள்கொண்ட செயல்களில் சற்று கவனத்தோடு இருந்தால் ஆதாயத்தை அடைய முடியும். லட்சுமி நரசிம்மர் வழிபாடு நல்லது.*

அவ்வப்போது வருமானம் தந்துகொண்டிருக்கும். அல்லது உங்களது மாத சம்பளம், எக்ஸ்ட்ர இன்கம் தரும். சிலரின் வியாபாரத்தில் உங்கள் பங்குதாரர்கள். நிறைய யோசனைக் கூறி அதன்மூலம் வியாபார பெருக்கம் உண்டாக்கி, பண விருத்தியை அதிகரிப்பர்.

புதன் சந்திரனுடன் இணையும்போது, கல்வி பெருக்கம் உண்டாகும். இந்த அமைப்பு ஜாதகர்கள், வாகனம். வீடு சம்பந்த கல்வி கற்று, அவை சார்ந்த சர்வீஸ் சென்டர் ஆரம்பித்துவிடுவர். இன்னும் சிலர் ரியல் எஸ்டேட் தொழிலில், கட்டடம் புதுப்பிப்பதில் நுண்ணிய அறிவு, பழைய கட்டங்களை இடித்து புதுசாக கட்டும் பிரிவு என இவற்றில் முக்கியமான வராக இருப்பர். சிலர் போர் பம்ப, குடிநீர் வாரிய பணி மற்றும் குளம், ஆறு, நதி இவற்றின மேம்பாடு சம்பந்த பணியில் இருப்பர். சந்திரன், புதனின் சுபத்தன்மை, கல்வி, கட்டடம்மூலம் நல்ல வருமானமும், வெற்றியும் தரும்.

மேஷ லக்னம் 3-ஆம் அதிபதி புதன் சூரியனுடன் சேர்ந்தால் கண்டிப்பாக அரசியல் அல்லது அரசு பதவியில் மிக மேன்மையாக இருப்பர். உங்களில் பலர் பங்குவர்த்தகத்தில், நல்ல அறிவு தெளிவு பெற்று, அதன்மூலம் லாபம் அடைவர். சிலர், வாரிசுகளின்மூலம் நல்ல மேன்மை காண்பர். இவர்களின் நல்ல ஞாபக சக்தியும், விஷய நிபுணத்துவமும், இவரை மக்களில் முதன்மையராக மாற்றும். பூர்வீக இடத்தில் இருந்து, ஏதோ ஒரு உபரி வருமானம் பெற்றுக்கொண்டே இருப்பார்கள். கலை உலகில், உங்களின் உழைப்பு, வெற்றி தேடித்தரும். அவ்வளவு ஏன்? உங்கள் காதலும் நிறைய வெற்றிகொண்டு வந்துசேர்க்கும். சினிமா உலகில் உங்களின் இயந்திர சம்பந்த உழைப்பு புகழ் தேடித்தரும். புதனும், சூரியனும் சுபமாக இருப்பின், புத்தி பூர்வ உபரி வருமானம் உண்டு.

3-ஆமிட அதிபதி புதன், குரு சம்பந்தம் இந்த சேர்க்கை அனேகமாக வெளியூர், வெளிமாநிலம், வெளிநாடு பயண சம்பந்த தொழிலை அல்லது பயணசீட்டு ஒப்பந்தத்தை குறிக்கும். உங்களில் பலர் ஆன்மிக ஸ்தல யாத்திரை என்ற பெயரில் வெப்சைட் ஆரம்பித்து, நல்ல முன்னேற்றம் பெறுவீர்கள். ஐ.ஏ.எஸ், நீர் தேர்வு போன்ற உயர்கல்வி பயிற்சி மையம் ஆரம்பித்து, செழிப்பு பெறுவீர்கள். சிலர் உங்கள் வேலை தவிர்த்து, இம்மையங்களில் பகுதி நேர பயிற்சியாளராக உபரி பணம் ஈட்டுவீர்கள். சிலர் நாலு சக்கர வாகனம், விமானம், கப்பல் இராணுவ தளவாடங்கள் இவை ஓட்ட கற்றுத் தரும். பயிற்றுவிப்பனளாராக இருப்பீர்கள். வேத

**ஆர். மகாலட்சுமி**



பாட சாலையில் பகுதி நேர உபாத்யாராக இருந்து ஸைட் இன்கம் பெறுவீர்கள். சிலர் சட்டத்துறையில் நடுவராக இருப்பீர்கள். சொந்த ஆன்மிக பத்திரிகை நடத்த இயலும். இந்த புதன்+குருவின் சுப சம்பந்தம், பெரிய கல்வி கற்ற மனிதர்களின் தொடர்பை ஏற்படுத்தி அதன்மூலம் உபரி வருமானம் தரும்.

மேஷ லக்னம் 3-ஆம் அதிபதி புதனும், சனியும் சேர, இவர்கள் தொழில் முனைவோரின் வழிகாட்களாக இருப்பர். புதிய தொழில் ஆரம்பிப்பது, அதன் செய் முறைகள்: யாரை, எப்படி எந்நேரம் அணுகி கடன் வாங்குவது, பொருட்களை சந்தைப்படுத்துவது எங்ஙனம் என இம்மாதிரி பயிற்சிகளை, யோசனையாக கூறி, திட்டமிட உதவும் பணியில் இருப்பர். சிலர் இதனையே முழு நேர தொழிலாகவும், சிலர் பகுதி நேர தொழிலாகவும் கொண்டிருப்பர். வேறு சிலர், அரசியலில் நிழல் உலக புள்ளிகளாக வலம் வருவர். இவர்கள் வெளியில் பிரபலம் ஆகாமல் இருந்து, மறைவாக, கட்சிகளுடன், கூட்டணிகளை சேர்ப்பது, பிரிப்பது, கட்சிக்குள் சண்டை மூட்டிவிட்டு, ஒரு கட்சியை ஒம்பது கட்சியாக பிரிப்பது, புதுக்கட்சி ஆரம்பிக்கச் செய்து அம்போவென கைவிடுவது, தொண்டர்களிடையே கலக மூட்டுவது, நிறைய குசும்பு பரப்புவது, சண்டை மூட்டுவதெற்கென்றே கை பேசியில் சேனல் ஆரம்பிப்பது என அரசியலை அதகளம் செய்வர். இவர் பெயர் பொது வெளியில் தெரியவே தெரியாது. கமுக்கமாக இருந்து, பெரிய சம்பவம் செய்வர். சனியும், புதனும் மிகச் சுபமாக இருப்பின், நாடு, மாநில அளவில் இந்த வேலை செய்வர். ரொம்ப சுமார் தன்மையாக இருந்தால் மாவட்ட அளவில் இந்த வேலை செய்வர்.

மேஷ லக்னம் 3-ஆம் அதிபதி புதன், ராகுவோடு சேர்ந்தால் சுபத்தன்மை பெற்றிருந்தால், அயல்நாட்டு தூதராக பணியாற்றுவார். இவர்களின் மன தைரியம் அச்சமூட்டுவதாக அமையும். இவர்கள் உள்நாட்டில், துப்பறியும் வேலை செய்வர். உளவுத்துறையில் பணிபுரிவர், சிலர் வேறு வேலை பார்த்துக்கொண்டே உளவு வேலையை பகுதி நேரத்தில் செய்து, உபரி பணம் சம்பாதிப்பர். இது பொதுமக்களின் பாதுகாப்பு கருதியும் இருக்கும். மக்களின் மத்தியில் குண்டு வீசவும் இருக்கும். வேறு சிலர் கள்ள நோட்டு அச்சிட்டு ரகசிய விநியோகம் செய்வர்.

சிலர் கள்ள பத்திரம், போலி சர்டிபிகேட் இவற்றை பகுதி நேர வேலையாக செய்வர்.

புதனும், கேதுவும் சேர்க்கை பெற்றால் அது நிச்சயமாக காதல் விவகாரம்தான். காதல் சார்ந்து வேண்டாத- வெளங்காத வேலைகள் அனைத்தும் நிபுணராக இருப்பர்.

மேஷ லக்னம் 3-ஆம் அதிபதி புதன் உச்சம் பெற்றால், மிகுந்த மன தைரியமாக, யாரையும் எதிர்த்து போராடுவீர்கள். அதனால் இவர்கள் வழக்கறிஞர்களாக, மனிதவள மேம்பாட்டு தலைவர்களாக, நீர்நிலை, குழந்தைகள் பாதுகாவலராக, உபரி நேர வேலையாக, ஒரு தொண்டாகச் செய்வர்.

**செல்: 94449 61845**

*நக்கீரன் பப்ளிகேஷனுக்காக நக்கீரன் பிரிண்டர்ஸ் & பைண்டர்ஸ், 105, ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை-600 014.-ல் அச்சிட்டு வெளியிடுபவர் : நக்கீரன்கோபால்*
*ஆசிரியர் : ஆர். பாலமுருகன்*
Owned by Nakkheeran Publications, Printed and Published by **Nakkheeran Gopal.** Printed at Nakkheeran Printers and Binders, 105, Jani jahan khan road, Royapettai, Chennai-14. and Published from the same address. Phone: 43993000
Editor: **R.Balamurugan**

# பாலஜோதிடம்

வார இதழ் எண்கள்

## ஜோதிட வாசகர்களின்

எதிர்பார்ப்புகளைப்
பூர்த்தி செய்யும் ஒரே ஜோதிட வார இதழ்!

சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| 1 வருடம் | ரூ 900 | 52 இதழ்கள் |
| 3 வருடம் | ரூ 2,300 | 156 இதழ்கள் |
| 5 வருடம் | ரூ 3,300 | 250 இதழ்கள் |




**அனைத்து விதமான
ஜோதிட சாஸ்திரங்களை வழங்கும்
பாலஜோதிடம் இதழுக்கு சந்தா செலுத்தி
தொடர்ந்து இணைந்திருங்கள்!**

தொடர்புக்கு :

**89398 82466**
**96770 91385 044 26881800**

Posted at Egmore RMS, Patrika Channel, Chennai 600 008. Date of Publication on posting Every Friday.
Balajothidam-Enngal, Tamil Weekly Regd No:TN/CH(C)/11/2024-2026 RNI NO: 42635/84

# பஞ்சாங்க ஆன்மிகக் குறிப்புகள்!

| தேதி கிழமை | திதி | நட்சத்திரம் | அமிர்தாதி யோகம் | சூலம் பரிகாரம் | யோகினி | நாள் | ராகு காலம் | எம கண்டம் | நல்ல நேரம் | விரதம் விசேஷம் | செயல் குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11-1-2026 மார்கழி 27 ஞாயிறு | காலை 10.20 வரை அஷ்டமி பின் (தே) நவமி | மாலை 6.12 வரை சித்திரை பின் சுவாதி | நாள் முழுவதும் சித்தயோகம் | மேற்கு, இனிப்பு. | காலை 10.20 வரை தென்கிழக்கு பின் தென்மேற்கு | நாள் முழுவதும் சமநோக்கு நாள் | மாலை 4.30–6.00 | காலை 12.00–1.30 | காலை 6.00–7.30 9.30–10.30 மதியம் 1.30–2.00 மாலை 4.00–4.30 | | புதிய முயற்சிகளையும் பயணங்களையும் தவிர்க்கவும். ஏற்கெனவே தொடங்கிய செயல்களைத் தொடர்ந்து செய்யலாம். |
| 12-1-2026 மார்கழி 28 திங்கள் | பகல் 12.43 வரை நவமி பின் (தே) தசமி | இரவு 9.05 வரை சுவாதி பின் விசாகம் | இரவு 9.05 வரை அமிர்தயோகம் பின் மரணயோகம் | கிழக்கு, தயிர். | பகல் 12.43 வரை தென்மேற்கு பின் தெற்கு | இரவு 9.05 வரை சமநோக்கு நாள் பின் கீழ்நோக்கு நாள் | காலை 7.30–9.00 | காலை 10.30–12.00 | காலை 6.00–7.30 9.30–10.30 மதியம் 12.00–2.00 மாலை 4.30–5.30 | லட்சுமி நரசிம்மருக்கு உகந்த நாள். | ஏற்கெனவே தொடங்கிய செயல்களைத் தொடர்ந்து செய்யலாம். |
| 13-1-2026 மார்கழி 29 செவ்வாய் | மாலை 3.18 வரை தசமி பின் (தே) ஏகாதசி | இரவு 12.06 வரை விசாகம் பின் அனுஷம் | இரவு 12.06 வரை மரணயோகம் பின் சித்தயோகம் | வடக்கு, பால். | மாலை 3.18 வரை தெற்கு பின் மேற்கு | இரவு 12.06 வரை கீழ்நோக்கு நாள் பின் சமநோக்கு நாள் | மாலை 3.00–4.30 | காலை 9.00–10.30 | காலை 7.30–8.30 மதியம் 12.00–1.00 மாலை 4.30–5.30 | | புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். ஏற்கெனவே தொடங்கிய செயல்களைத் தொடர்ந்து செய்யலாம். |
| 14-1-2026 மார்கழி 30 புதன் | மாலை 5.53 வரை ஏகாதசி பின் (தே) துவாதசி | பின்னிரவு 3.04 வரை அனுஷம் பின் கேட்டை | நாள் முழுவதும் சித்தயோகம் | வடக்கு, பால். | மாலை 5.53 வரை மேற்கு பின் வடமேற்கு | நாள் முழுவதும் சமநோக்கு நாள் | மதியம் 12.00–1.30 | காலை 7.30–9.00 | காலை 6.00–7.30 9.30–10.30 மதியம் 2.00–3.00 மாலை 4.30–6.00 | ஏகாதசி விரதம். போகிப் பண்டிகை. உத்தராயண புண்ணியகாலம் பெருமாள் வழிபாடு உத்தமம். | சுபமுகூர்த்த நாள். சுபமுயற்சிகளைச் செய்ய ஏற்ற நாள். |
| 15-1-2026 தை 1 வியாழன் | இரவு 8.17 வரை துவாதசி பின் (தே) திரயோதசி | பின்னிரவு 5.48 வரை கேட்டை பின் மூலம் | பின்னிரவு 5.48 வரை பிரபலாரிஷ்ட யோகம் பின் சித்தயோகம் | தெற்கு, எண் ணெய். | இரவு 8.17 வரை வடமேற்கு பின் வடகிழக்கு | பின்னிரவு 5.48 வரை சமநோக்கு நாள் பின் கீழ்நோக்கு நாள் | மதியம் 1.30–3.00 | காலை 6.00–7.30 | காலை 7.30–9.30 10.30–11.30 மதியம் 12.00–1.30 மாலை 4.00–6.00 | பொங்கல் பண்டிகை. பொங்கல் வைக்கும் நேரம்: காலை: 9.00–11.00 பகல் 1.00–1.30 | கரி நாள். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். ஏற்கெனவே தொடங்கிய செயல்களைத் தொடர்ந்து செய்யலாம். |
| 16-1-2026 தை 2 வெள்ளி | இரவு 10.22 வரை திரயோதசி பின் (தே) சதுர்த்தசி | நாள் முழுவதும் மூலம் | நாள் முழுவதும் அமிர்தயோகம் | மேற்கு, இனிப்பு. | இரவு 10.22 வரை வடகிழக்கு பின் ஆகாயம் | நாள் முழுவதும் கீழ்நோக்கு நாள் | காலை 10.30–12.00 | மாலை 3.00–4.30 | காலை 6.00–7.30 9.30–10.30 மதியம் 1.00–3.00 மாலை 4.30–5.30 | பிரதோஷ விரதம். மாட்டுப்பொங்கல். திருவள்ளுவர் தினம். சிவ வழிபாடு உத்தமம். | கரி நாள். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். ஏற்கெனவே தொடங்கிய செயல்களைத் தொடர்ந்து செய்யலாம். |
| 17-1-2026 தை 3 சனி | இரவு 12.04 வரை (தே) சதுர்த்தசி பின் அமாவாசை | காலை 8.12 வரை மூலம் பின் பூராடம் | நாள் முழுவதும் சித்தயோகம் | கிழக்கு, தயிர். | இரவு 12.04 வரை ஆகாயம் பின் பூமி | நாள் முழுவதும் கீழ்நோக்கு நாள் | காலை 9.00–10.30 | மதியம் 1.30–3.00 | காலை 7.30–8.30 மதியம் 10.30–12.30 மாலை 4.30–5.30 | காணும்பொங்கல். மாத சிவராத்திரி. சிவ வழிபாடு உத்தமம். | கரி நாள். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். ஏற்கெனவே தொடங்கிய செயல்களைத் தொடர்ந்து செய்யலாம். |

(தே)- தேய்பிறை